பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 14 ஞாயிற்றுக்கிழமை (28.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 214

# அந்தரிக்கிறது 'வணங்காமண்' கப்பல்; சென்னையில் நங்கூரமிட்டுவிட்டுத் திரும்ப முயற்சி!

## 51 நாள் தொடர் உலைச்சலால் மாலுமிகளும் மற்றோரும் சலிப்பு!

சென்னை, ஜூன் 28


இலங்கையில், வன்னியில் நடைபெற்ற போரினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு, ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் அனுப்பிய உணவு மற்றும் மருந்துப் பொருள்களுடன் லண்டனில் இருந்து புறப்பட்ட கப்டன் அலி ('வணங்காமண்') கப்பல் சென்னைக் கடலில் பல நாள்களாக நின்று அந்தரிக்கிறது.

தொடர்ச்சியாக 51 நாள்கள் பயணித்த அலைச்சல், உலைச்சலால் உண்டான சலிப்பில் 'வணங்காமண்'ணை சென்னைக் கடலில் நங்கூரமிட்டுவிட்டு தமது சொந்த நாடுகளுக்குச் செல்வதற்கு மாலுமிகளும் அவர்களுடன் கூட வந்த பயணிகளும் உத்தேசித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதலில் கொழும்புக்குச் சென்று அங்குஅனுமதி வழங்கப்படாமல் சென்னைத் துறைமுகத்தில் சர்வதேசக் கடல் எல்லையில் சில நாள்கள் இக் கப்பல் தரித்து நின்றது.

இந்திய - இலங்கை அதிகாரிகள் இடையே கடந்த புதன்கிழமை நடைபெற்ற பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கத்தினைத் தொடர்ந்து இப்போது சென்னைத் துறைமுகத்திற்கு ஐந்து கடல் மைல் தொலைவில் கப்பல் தரித்துள்ளது.

இரு நாட்டு அதிகாரிகளும் உடன்பட்ட பிரகாரம், உதவிப் பொருள்களை சென்னையில் இறக்கி செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் வன்னிக்குக் கொண்டு செல்வதற்கான உத்தேச ஏற்பாடுகளில் முன்னேற்றம் எதுவும் நேற்றுவரை இல்லாததால் மாலுமிகளும் உடன் பயணம் செய்தவர்களும் பெரும் சலிப்படைந்துள்ளனர்.



இம்மாதம் 24 ஆம் திகதி இந்திய - இலங்கை அதிகாரிகள் நடத்திய பேச்சுக்களின் பின்னர் (20 ஆம் பக்கம் பார்க்க)

## அரச சேவையில் இணைவதற்கு தமிழ்மொழி கட்டாயமாகிறது

### டியூ குணசேகர இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 28

எதிர்காலத்தில் அரச பணிகளில் இணைந்து கொள்பவர்கள் அனைவரும் தமிழ்மொழியில் சித்தியடைந்திருக்கவேண்டும். இது கட்டாயமாக்கப்படும்.

அரசமைப்பு விவகார அமைச்சர் டியூ குணசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் காலங்களில் அரச பணிகளில் இணைந்து கொள்ளும் அனைவரும் தமிழ் மொழியில் சித்தியடைந்திருக்க வேண்டும். தமிழ் மொழியில் சித்தியடையாதோர் அரச பணிகளுக்கு அமர்த்தப்படமாட்டார்கள்.

அரச சேவையில் உள்ளவர்களுக்குத் தமிழ்மொழி (20 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை**

ஜி.சி.ஈ உயர்தர மாணவர்களுக்கான 2 பக்கங்கள் கொண்ட மாதிரிவினாத்தாள்கள்

## கருணா, சந்திரகாந்தன் அணிகளின் உறுப்பினர்கள் இராணுவத்தில் சேர்கின்றனர்

கொழும்பு, ஜூன் 28

அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா), கிழக்கு மாகாண முதல மைச்சர் எஸ்.சந்திரகாந்தன் ஆகிய இருவரினதும் அணிகளைச் சேர்ந்தோர் இராணுவ வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

அமைச்சர் முரளிதரனின் பிரிவில் உள்ள உறுப்பினர்களில் (20 ஆம் பக்கம் பார்க்க)

## போரினால் அழிவடைந்த ரயில்வே பாதையை புனரமைக்க பாகிஸ்தான் 2 மில்லியன் டொலர் உதவி

இஸ்லாமாபாத், ஜூன் 28

இலங்கையில் சிவில் யுத்தத்தினால் அழிவடைந்த ரயில்வே பாதையை புனரமைக்க பாகிஸ்தான் ரயில்வே அமைச்சு உதவி வழங்க இருக்கின்றது.

இந்தப் பணிக்காக இரண்டு மில்லியன் டொலர்கள் உதவியை வழங்கும் ஒப்பந்தம் ஒன்று நேற்று இஸ்லாமாபத் தில் கைச்சாத்தகியுள்ளது.

பாகிஸ்தான் ரயில்வே ஆலோசனை சபை இலங்கையுடன் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

ரயில்வேயை நவீனமயப்படுத்தவும் ஊழியர்களுக்கு (20 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் சட்ட நடவடிக்கை?

கொழும்பு, ஜூன் 28

யாழ். மாநகரசபைத் தேர்தலில் தமது கட்சி தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக மேல்நீதி மன்றில் மனுத் தாக்கல் செய்ய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்முடிவு செய்துள்ளது.

இத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் (20 ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளியவளைப் பிரதேசத்தில் செய்மதித் தொலைபேசிகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 28

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை, கட்டைக்காடுப் பகுதியில், இரகசிய தகவலொன்றையடுத்து, ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான ஜி.பி.எஸ் மற்றும் செய்மதித் தொலைபேசிகள், அவற்றுக்கான 'சிம் கார்டு'கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பனை மரம் ஒன்றின் மீது இவைகள் இரகசியமாக ஒளித்து வைக்கப்பட்டிருந்தன. பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, அங்கு சென்ற வவுனியாப் பொலிஸார் இவற்றைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## 'பார்சல்' தபாலில் இருந்த துப்பாக்கியால் சென்னை விமான நிலையத்தில் பரபரப்பு!

சென்னை, ஜூன் 28

தமிழகத்தில் இருந்து கொழும்புக்கு வந்த 'பார்சல்' தபாலில், துப்பாக்கி ஒன்று இருந்ததால் சென்னை விமான நிலையத்தில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது!

இந்தச் சம்பவம் தொடர்பாக விமான நிலையத்தில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிடுகையில்-

சென்னை அண்ணாசாலையச் சேர்ந்த விஜய் என்பவர், இலங்கைத் தலைநகரான கொழும்பில் உள்ள தனது நண்பர் சபரீசனுக்கு பறவைகளைச் சுடும் துப்பாக்கி ஒன்றை பரிசாக அனுப்ப விரும்பினார். அதையடுத்து பார்சல் தபால் மூலம் கொழும்பு முகவரியிட்டு, துப்பாக்கியை அனுப்பினார்.

இந்தப் பார்சலை தபால் துறையைச் சேர்ந்த சுப்ரமணியன் என்பவர் விமான நிலையத்தில் கையளித்தார். நேற்றுக் காலை 11.30 மணிக்குச் சென்னையில் இருந்து கொழும்பு புறப்பட இருந்த ஸ்ரீலங்கன் ஏயர் வேஸ் மூலம் இந்தப் பார்சல் அனுப்பப்பட இருந்தது. துப்பாக்கி இருந்த பொதியை 'ஸ்கான்' செய்த போது, (20 ஆம் பக்கம் பார்க்க)



டயலொக் CDMA இப்போது யாழ்ப்பாணத்தில்

டயலொக் CDMA முற்கொடுப்பனவு இணைப்பு ரூ. 5999/- மட்டுமே

- இலவச IDD இணைப்பு
- செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்
- ஆரம்பக் கட்டணம் எதுவுமில்லை
- ரீலோட் செய்யும் வசதி

வாடிக்கையாளர் சேவை இலக்கம் 011 7 100 100

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## லண்டனில் உயர்கல்வி பயில்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள (லண்டன்) உள் துறை அலுவலகத்தால் 'A' தரத்தில் பட்டியலிடப்பட்ட தலைசிறந்த, நீண்டகால வரலாற்றையுடைய பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் விரும்பிய கற்கைநெறிகளுக்கு அனுமதி.

குறைந்த கட்டணச்சலுகைகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள், தங்குமிடவசதி ஏற்பாடுகள், பகுதிநேர வேலைக்கான ஆலோசனைகள் என்பனவும் வழங்கப்படும்.

இன்று (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை (ஒவ்வொரு ஞாயிறும்) காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நேரில் சந்திக்கலாம். ஏற்கனவே சந்தித்தவர்கள் தங்களிடம் கோரப்பட்ட விவரங்களுடன் இன்று (ஞாயிற்றுக்கிழமை) வரவும்.

உடன் தொடர்புகளுக்கு :-

தொ.பே.0212223818,

எந்த நேரமும் தொடர்புகொள்ள 0774528818

E.Mail : mg 1404_2009@ yahoo.com

148, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். ( புளிசெவ் முன்பாக) (சி/559246)


## தேர்த் திருவிழாக்கள் இன்று

சங்கானை அரசடி வைரவர் ஆலயம், திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், நல்லூர் மூத்த விநாயகர் ஆலயம் ஆகியவற்றின் பெருந் திருவிழாக்களில் இன்று தேர்த்திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

[சிறப்பிதழ்கள் 6 ஆம், 15 ஆம், 17 ஆம் பக்கங்களில்]

## மரண அறிவித்தல்கள்

### தேவசகாயம் மாக்கிறேற்றம்மா



அச்சுவேலி வடக்கு, வல்லை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் மாக்கிறேற்றம்மா நேற்று (27.06.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசகாயத்தின் அன்பு மனைவியும் அன்ரனிராசா, கியூபேட்ராசா (டென்மார்க்), றோபேட்ராசா, பாமா, கேமா, ரமேஸ், சித்திரா, ராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மங்களேஸ்வரி, ராணி (டென்மார்க்), புஸ்பராணி, தங்கராசா, தவராசா, யூட்ஸ்ஜினா, சுரேஸ், கிரிசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அச்சுவேலி அந்தோனியார் கோயிலில் இன்று (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெற்று பூதவுடல் வல்லை அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல்:
இ.தங்கராசா (மருமகன்)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய உப அதிபர் திருமதி சந்திரமலர் செல்வராஜா அவர்களின் பாசமிகு தந்தை

### கந்தையா சுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக் கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,

யா/ மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலயம்.

### சுப்பிரமணியம் சோமநாதன்



(ஓய்வு பெற்ற மின் பொறியியலாளர்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சோமநாதன் நேற்று (27.06.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - ஞானம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சறோஜினியின் அன்புக் கணவரும், றூபன் (கனடா), சோமினா (அவுஸ்திரேலியா), தேவினா (கனடா), மஞ்சுளா (டென்மார்க்), ஜெயந்தன் (கனடா), லக்சுமி (கனடா), நிருபா (அவுஸ்திரேலியா), பிருந்தா (கனடா) ஆகியோரின் தகப்பனாரும், நிம்மா (கனடா), ஜீவராஜ் (அவுஸ்திரேலியா), குமார் (கனடா), ரஞ்சன் (டென்மார்க்), கலா (கனடா), யுவன் (கனடா), பெனடிற் (அவுஸ்திரேலியா), சுரேஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், குலதேவி காலஞ்சென்றவர்களான கருணாதேவி, தயாளதேவி, மற்றும் பரிசுதன், ரவீந்திரன், சறோஜாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி தென்இந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பொலிஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி.

தகவல்
சி.அருள்மணி

## 97 ஆம் நாள் நினைவஞ்சலி



### கேதீஸ்வரன் ரபீஷ்மன்

தாயின் மடியில்: 26.11.1997

மண்ணின் மடியில்: 22.03.2009

துள்ளித்திரியும் பள்ளிப்பருவத்தில்
உன்னை மண்ணில் வாழவிடாமல்
காலனவன் இடைமறித்தது ஏனோ!
கலங்குகின்றோம் ரபீஷ்மனே
-எங்கு சென்றாய்
மாலை வேளையில் எங்கள் முன்
வந்து நிற்பாயே ரபீஷ்மனே
எங்கு சென்றாய் தேடுகிறோம்
மாதம் மூன்று சென்றிடினும்
மறந்திடுமோ உன் திருமுகம்
தாங்கொணாத் துயரத்தில் தத்தளிக்கும் -எங்களுக்கு
உன் நினைவுகளே போதுமடா
எம் கண்ணீர் வெள்ளம்கரைபுரண்டோட
நீ கடவுளடி சேர்ந்து விட்டாயடா
உன் ஆத்மா சந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனின்
பாதமலர் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விஜயன் வெதுப்பகம்,
மங்களவடி,
வேலணை.

உன் பிரிவால் துயருறும்:
இ.விஜேந்திரன் (கிளி மாமா),
அத்தை, மச்சாள்மார், மச்சான்.

(சி/559244)

## இதய அஞ்சலி



ஈழத்தின் மூத்த கவிஞரும், தமிழறிஞரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், "தாயகம்" கலை இலக்கிய இதழின் ஆசிரியர் குழு உறுப்பினருமான.

### கலாநிதி இ.முருகையன்

அவர்களது மறைவுத் துயரில் அவரது குடும்பத்தினருடனும், உற்றார், உறவினர் கலை இலக்கிய நண்பர்களுடனும் இணைந்து பங்கு கொள்வதுடன் தலை தாழ்த்தி எம் இதயம் நெகிழ்ந்த அஞ்சலியை செலுத்தி நிற்கிறோம்.

தேசிய கலை இலக்கியப் பேரவை.

## மரண அறிவித்தல்

### கலாநிதி இராமுப்பிள்ளை முருகையன்

(பதிப்பாசிரியர், ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர், ஓய்வு பெற்ற சிரேஷ்ட உதவிப்பதிவாளர்)

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கவிஞர் இ.முருகையன் நேற்று (27.06.2009) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை-செல்லம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - அன்னம்மா தம்பதியினரின் மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், நாவலன், நாமகள் ஆகியோரின் அன்புத் தகப்பனும், செல்வகுமாரின் மாமனும், கிருத்திகன், அபிராமி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, கமலாம்பிகை (ஓய்வு பெற்ற மொழி பெயர்ப்பாளர், சட்டமா அதிபர் திணைக்களம்), சிவானந்தன் (கல்விப் பணிப்பாளர்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

426/38, - 5/3 K.சிறில். C.பெரேரா
மாவத்தை, கொழும்பு - 13.
T.P - 0112 384878

தகவல்:
மு.நாவலன் (மகன்).


## பணியாளர்கள் தேவை

யாழ்.நகரிலுள்ள புடைவை வியாபார நிறுவனம் ஒன்றுக்கு முன் அனுபவமுள்ள பெண் பணியாளர்கள் தேவை.

29.06.2009 திங்கட்கிழமை நேரில் தொடர்பு கொள்ளவும். ஊதியம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
இல. 24, நியூ மார்க்கட் மேல் மாடி,
யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர் A.போகராசா
(யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்புத் திணைக்களம்)
அவர்களின் அன்புத் தந்தை

### சுவாமிநாதர் அப்புத்துரை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது திணைக்களத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்புத் திணைக்களம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

யாழ்/பல்கலைக்கழக
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.


## மருத்துவ/விற்பனை பிரதிநிதிகள் - பயிலுநர்கள்

GEORGE STEUARTS GROUP

இலங்கையில் பழமைவாய்ந்த வியாபார ஸ்தாபனத்தின் உப நிறுவனமும், மருத்துவ உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தலிலும் மற்றும் விநியோகித்தலிலும் விரைவாக வளர்ந்து வருவதும், உலகம் முழுவதும் பிரபலமான கம்பனிகளை பிரதிநிதித்துவப்படுத்துவதுமான ஜோர்ஜ் ஸ்ருவட்ஸ் ஏஜன்சீஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனம் மேற்குறிப்பிட்ட இடங்களை உடனடியாக பூர்த்திசெய்யத் தீர்மானித்துள்ளது.

இக் கம்பனியின் மருந்தகப் பிரிவை வளப்படுத்துவதற்கு பற்றுறுதியும் சிறந்த ஆளுமையும் கொண்ட தனிநபர்களை எதிர்பார்க்கின்றோம்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

★ க.பொ.த.(சா/த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி.

★ தரப்படுத்தப்பட்ட, பொதுநிலையான மருந்துகளை விற்பதிலும் முன்னேற்றுவதிலும் ஆகக் குறைந்தது 2 வருட அனுபவம்.

★ ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சியும் ஏனைய மொழிகளில் அறிவும் பெற்றிருப்பது மேலதிக நன்மையாகும்.

★ வயது 30 இற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

★ சந்தைப்படுத்தலில் தொழில்சார் தகைமை பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகும்.

கவர்ச்சிகரமான, சம்பளம் வழங்கப்படும் - பேசித்தீர்மானிக்கலாம்.

உங்கள் முழுமையான சுயவிபரக்கோவையுடன் முன்னைய மற்றும் தற்போதைய தொழில் பற்றிய விபரங்களையும், அண்மையில் எடுக்கப்பட்ட கடவுச்சீட்டு அளவுள்ள ஒரு புகைப்படத்தையும், கல்விசார்/தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகளையும், உறவினரல்லாத இரு நபர்களின் பெயர்களையும் இணைத்து, கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு இக் கம்பனியால் அதிகாரமளிக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விநியோகத்தர்களுக்கு அனுப்பவும்.

வெஸ்கோ பார்மசி அன்ட் மெடிக்கல் ஷொப்,
470 (250), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

GEORGE 1835 174 YEARS 2009 STEUARTS



## கூரியர் சேவை

இலங்கையின் சகல இடங்கள் மற்றும் உலகின் சகல நாடுகளுக்குமான கடிதங்கள், பொதிகள், CD மற்றும் ஆவணங்கள் போன்றன

✷ விரைவாக ✷ பாதுகாப்பாக ✷ குறைந்த கட்டணத்தில்

குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்

ARRUL GLOBAL EXPRESS இல. 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P : 021 2226113


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லா வாக்குகளும் இறைவனுக்கே!

ஈரானிய ஜனாதிபதித் தேர்தலில் அஹமதிநிஜாத் வெற்றி பெற்றுள்ளார் என்று அந்நாட்டின் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். தேர்தல் முடிவை ஏற்க மறுத்து தெஹ்ரான் வீதிகளில் ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன.

மேற்குலகுடன் மோதல் போக்கைப் பின்பற்றும் கடும்போக்காளர் என வர்ணிக்கப்படும் அஹ்மதிநிஜாத், தேர்தலில் தோற்கடிக்கப்படுவார் என மேற்கத்திய ஊடகங்கள் பல ஆருடம் கூறி வந்தன. அவருக்கு எதிராகப் போட்டியிட்ட முசாவி ஒரு சீர்திருத்தவாதியாக [அதாவது லிபரல் போக்கு] ஊடகங்களால் காண்பிக்கப்பட்டார். முசாவிக்குப் பின்னால் திரண்டிருந்த இளைஞர் பட்டாளத்தைப் படம் பிடித்துக் காட்டி, முசாவிக்கு நாடு முழுவதும் ஆதரவு இருப்பதாகக் கூறிக் கொண்டன. பொதுவாக, தமது அரசியல் கொள்கை சார்ந்த ஒருவர் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற அபிலாஷை காரணமாக இந்த முறையும் சற்று அதிகமாகவே எதிர்பார்த்திருக்கிறார்கள் மேற்கத்தியர்கள்.

பொதுவாகவே மத்திய கிழக்கு நாடுகள் பற்றிப் புரிந்துணர்வு, மேற்குலகில் குறைவு. அதிலும் ஈரானின் உள்நாட்டு விவகாரம் பற்றி எப்போதும் தவறாகவே எடை போடுகின்றனர். ஈரானில் இருந்து அமெரிக்காவுக்கு உயர்கல்வி கற்கச் சென்ற மாணவி ஒருவர் தனக்கு நேர்ந்த அனுப வத்தைப் பின்வருமாறு தெரிவித்தார். ஈரானில் பெண்கள் பல்கலைக்கழகக் கல்வி கற்றிருக்கிறார்கள் என்ற விஷயத்தை அப்போது தான் சக மாணவர்கள் ஆச்சரியத்துடன் தெரிந்து கொண்டார்களாம். ஈரான் இஸ்லாமிய மத அடிப்படையிலான நாடு என்பதால், அங்கே பெண் கல்விக்குத் தடை உள்ளதாக 'அனைத்தை யும் அறிந்த' அமெரிக்கர்கள் நம்புகிறார்கள். ஈரான் அரசியல் பற்றிய புரிதலும் அவ்வாறே பத்தாம்பசலித்தனமாக உள்ளது.

இன்றைய ஈரானின் அரசியல் கட்டமைப்பு 1979 ஆம் ஆண்டு இடம்பெற்ற இஸ்லாமியப் புரட்சி யுடன் ஆரம்பமாகியது. புரட்சியைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட காவற்படை தேசத்தின் பாது காப்பை பொறுப்பெடுத்தது. ஆயத்துல்லாஹ் என அழைக்கப்படும் மதத்தலைவரான கொமெய்னி தேசத்தின் தலைவரானார். அமைச்சர்களும் அரசாங்கத்தை நடத்தியவர்களும் மதத் தலைவர்கள் தாம். இதை வைத்துக் கொண்டு, ஈரானில் மதம் அரியணை ஏறியிருந்தது என்று சொல்லப்படுவது உண்மை தான். ஆனால், குறிப்பிட்ட காலம் மட்டுமே மதத் தலைவர்கள் நேரடி நிர்வாகத்தில் ஈடுபட்டு வந்தனர். அந்தச் சில வருடங்களுக்குள், 'புரட்சியைக் காக்கும் படை' எதிர்ப்பாளர்களை அழித்தொழித்து விட்டது. புதியதோர் அரசியல் நிர்ணயச் சட்டம் எழுதப்பட்டு விட்டது. கடைசியாகச் சொன்ன வரிகளை தொடர்ந்து நினைவில் வைத்திருங்கள்.

ஆகவே, இப்போது அரசியல் களத்தில் குதிக்கும், தேர்தலில் எதிரும் புதிருமாக நிற்கும் சீர்திருத்தவாதிகள் எல்லோரும் புரட்சிக்குப் பின்னர் புதிதாகத் தோன்றியவர்கள். அதற்கான வழிகளை மதத் தலைவர்களே ஏற்படுத்திக் கொடுத்தனர். அதாவது தேசத்தை நிர்வகிக்கும் பொறுப்பை, அதற்கென திறமையுள்ள மத்தியதர வர்க்கம் ஒன்றிடம் கையளித்து விட்டு, மதத்தலைவர்கள் ஒதுங்கி விட்டனர். ஈரானின் அரசியல், பொருளாதாரத் தலைநகரம் எப்போதும் போல தெஹ்ரான் தான். இருப்பினும், தெற்கில் அமைந்திருக்கும் 'கும்' என்ற நகரம் மதத்தலைவர்களின் நிர்வாகத் தலைமையகமாகச் செயற்படுகின்றது. மதத்தலைவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கி விடவில்லை; மாறாக, கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்றம் நிறைவேற்றும் எந்தச் சட்டமும் மதத் தலைவர்களின் ஒப்புதல் இன்றி நடைமுறைக்கு வராது.

ஜனநாயகத் தேர்தல் கூட, மதத் தலைவர்கள் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் எழுதி வைத்தவை தாம். மேற்குலக நாடுகளோ, தமது அழுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகள் எனப் பெருமை பேசுகின்றன. உண்மை அதுவல்ல. இஸ்லாமியப் புரட்சியின் பரிணாம வளர்ச்சி இந்த ஜனநாயகத் தேர்தல். ஒன்றுமே புரியவில்லையே, தலையைச் சொரிபவர்களுக்காக ஓர் ஒப்பீடு. இங்கிலாந்து நாட்டில் பதினாறாம் நூற்றாண்டில் [புரட்டஸ்தாந்து] கிறிஸ்தவ மத அடிப்படைவாதப் புரட்சி ஏற்பட்டது. அதற்குப் பின்னர் நாடாளுமன்றமும், முடியாட்சியும் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளும் அரசியல் நிர்ணயச் சட்டமும் தோன்றின. இன்று பிரித்தானியா, நெதர்லாந்து, பெல்ஜியம், நோர்வே போன்ற நாடுகளில் அது போன்ற அரசியல் அலகு நடைமுறையில் உள்ளது. இந்த நாடுகளில் சோஷலிசக் கட்சி போன்ற 'சீர்திருத்தவாதக் கட்சிகள்' தேர்தலில் போட்டியிடவும் ஆட்சியமைக்கவும் முடியும். எந்தவொரு கட்சியும் அரசியல் சட்டத்தை மாற்ற, மன்னர் குடும்பத்தின் அதிகாரத்தை நீக்குவதற்கு விரும்பினால், அது பெரும் பிரச்சினையில் போய் முடியும்.

மேற்குலகில் பிரசாரம் செய்யப்படுவதைப் போல, ஈரானில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுப வருக்குத் தேசத்தை தலைகீழாக புரட்டிப் போடும் வல்லமை கிடையாது. அஹமதிநிஜாத் மதத்தலைவர்களுக்கு நெருக்கமானவராக காட்டப்பட்டாலும், இராணுவத்தைப் போருக்கு தயார் படுத்தும் அதிகாரம் கூட அவருக்கு இல்லை. ஈரானில் சர்வ வல்லமை பொருந்திய சிறப்புப் படையணியான 'புரட்சிக் காவல்படை' கூட அஹமதிநிஜாத் சொல் கேட்டு நடப்பதில்லை. ஈரானில் அனைத்துப் பாதுகாப்புப் படைகளின் தளபதியாக, உயர்மட்டத் தலைவரான ஆயத்துல்லா கொமெய்னி அதிகாரம் செலுத்துகிறார்.

பொதுத் தேர்தலில் அஹமதிநிஜாத் குழுவுக்கும், முசாவி குழுவுக்கும் இடையில் நிலவும் போட்டியும், முரண்பாடுகளும் ஈரானில் பெரிய மாற்றம் எதையும் கொண்டுவரப் போவதில்லை. இதனைத் தமிழ் நாடு மாநிலத்தில், இரு எதிர்க்கட்சிகளுக்கு இடையில் நடக்கும் பூசல்களுடன் ஒப்பிடலாம். நிச்சயமாக, ஈரானிலும் இரண்டு எதிர்க்கட்சிகள் ஒன்றையொன்று விமர்சிப்பதுடன் நில்லாது, அவதூறுகளையும் அள்ளி வீசுகின்றன.

சீர்திருத்தவாதி முசாவி வெற்றி பெற வேண்டுமாயின் முழு நடுத்தர வர்க்கமும், ஒரு பகுதி உழைப்பாளர் வர்க்கமும் வாக்களித்திருக்க வேண்டும். ஆனால், முசர்வியின் தேர்தல் பிரசாரம் முழுக்க முழுக்க நடுத்தர வர்க்க நலன்களைக் குறிவைத்தே செய்யப்பட்டன. உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள், நாளாந்தம் உயரும் விலைவாசியால் வாழ்வதற்கு அல்லற் பட வேண்டியுள்ளது. மறு வேளை உணவு எங்கேயிருந்து வரும் என்பது அவர்களது பிரச்சினை. அதற்கு மாறாக தின்று கொழுத்து, ஆடம்பரக் கார்களும், அமெரிக்க கலாசாரமுமாக வாழ்க்கையை அனுபவிக்கும் நடுத்தர வர்க்க ஈரானியர்களுக்கு வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அஹமதிநிஜாத் பதவியில் இருக்கும் காலத்தில் நடந்த உலகக் காற்பந்தாட்டப் போட்டிகளில் ஈரான் அணி வெற்றிக் கிண்ணத்தை பெறவில்லையாம். அதற்கு முன்னர் இருந்த சீர்திருத்தவாதி கத்தாமியின் ஆட்சிக்காலத்தில் ஈரான் உதைபந்தாட்ட அணி பல போட்டிகளில் ஜெயித்ததாம். [தி கார்டியன் வீக்லி 12-6-09] நடுத்தர வர்க்கத்துக்கு இவையெல்லாம் முக்கியமான பிரச்சினைகள். உதைபந்தாட்ட விளையாட்டு வெறி பொதுத் தேர்தலில் எதிரொலிக்கின்றது.

தேசிய முதலாளிகளின் வளர்ச்சிக்கு, மதத் தலைவர்கள் ஒரு நாளும் குறுக்கே நிற்கவில்லை. ஈரானின் பொருளாதாரம் முழுவதும் புரட்சிக்குப் பின்னர் தோன்றிய தேசிய முதலாளிகளின் கைகளில் உள்ளது. கூடவே முதலாளித்துவத்துக்கு சேவை செய்து கைநிறைய பணம் சம்பாதிக்கும் மத்திய தர வர்க்கம் ஒன்றும் உருவானது. மத்திய தர வர்க்கத்தின் ஆடம்பர மோகத்தையும், கலாசாரச் சீரழிவையும் ஆட்சியிலிருந்த மதத் தலைவர்கள் கண்டுகொள்ளவில்லை. பங்களாவில் நான்கு சுவர்களுக்குள் இளவயதினரின் நடன விருந்துகள் நடக்கின்றன. சுற்றுலா மையங்களில் 'பிக்னிக்' போகும் இளஞ்ஜோடிகள் உல்லாசமாகப் பொழுது போக்குகின்றனர். இஸ்லாமிய மத அடிப்படைவாத ஈரானில் இப்படி எல்லாம் நடக்கின்றது என்று சொன்னால் வெளியுலகில் யாரும் நம்ப மாட்டார்கள். ஆனால், இதையெல்லாம் அனுபவிப்பது, மொத்த சனத்தொகையில் 20 சதவீதமும் இல்லாத பணக்கார நடுத்தர வர்க்கம்.

ஏ. ஆர்.

நடுத்தர வர்க்கத்தில் இயல்பாகவே காணப்படும் மேலைத்தேய மோகம், அமெரிக்க அரசியல் சார்ந்ததாக இருப்பதில் வியப்பில்லை. மேற்குலக ஊடகங்கள் அதை அடிப்படையாக வைத்துப் பிரமைகளை தோற்றுவிக்கின்றன. ஈரானிய மக்கள் முழுவதும் அமெரிக்கா தங்களை வந்து விடுதலை செய்ய வேண்டும் என்று காத்திருப்பதைப் போல கதைகளைக் கட்டி விடுகின்றன. இந்தப் பின்னணியிலேயே ஈரான் தேர்தல் குறித்த மேற்கத்திய பரப்புரைகளையும் எடை போட வேண்டும்.

தேர்தல் முடிந்தவுடன் வந்த செய்தித் தலைப்புக்கள் இவை: "... தேர்தல் முடிவுகள் குறித்து எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் சந்தேகம்" [டைம்ஸ்] "வாக்குகள் களவாடப்பட்டு விட்டன என எதிர்க்கட்சி வேட்பாளர் முசாவி தெரிவிக்கிறார். "அமெரிக்க அரசியல் அவதானிகள் நம்ப முடியவில்லை என தெரிவித்தனர்." ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN THE UK
## SEPTEMBER 2009 INTAKE

**After graduation you can work full time for two years.**

THE UNIVERSITY OF SALFORD

The University of Salford (founded 1896) is one of the UK's most enterprising universities, and is ranked in the 10 for teaching, top 1/3 for research and has now been short-listed for possible inclusion in the world's top 500 universities.

Anglia Ruskin University is ranked in the Top 3rd of UK. Anglia Ruskin University provides the Quality teaching, outstanding facilities and academic and welfare support services .This allows international students the opportunity and freedom to study in a relaxed, friendly and supportive environment.

Anglia Ruskin University

UNIVERSITY OF TEESSIDE

Located on a single campus in the lively and exciting town of Middlesbrough in North East of England, the university of Teesside currently has nearly 1000 international students from over 100 countries.

Swansea University, in conformity with the general intention of its charter, aims to provide a working and learning environment which is free from unfair discrimination and will enable students to fulfill their personal potential. Recent surveys and league tables have consistently placed Swansea among the top 20 Universities in the UK for teaching quality and student satisfaction.

Swansea University
Prifysgol Abertawe

Middlesex University

A global University delivering outstanding higher education, partnering with prestigious institutions all over the world.

**Our services are absolutely free**

**Please call now P.K Suhanthan on 0777 209446**

KMS

## KNOWLEDGE MANAGEMENT SYSTEMS

*Leading educational consultants and training providers*

Trusted educational consultants with 11 years experience. Your Success is our Passion

**யாழ்.மாணவர்கட்கு பிரித்தானியாவில் கல்வி பயில ஓர் அரிய சந்தர்ப்பம்**
**இன்றே தொடர்பு கொள்ளுங்கள்**

**Colombo Office:**

329, Galle Road, Meewella Building, First Floor, Southern Wing, Colombo-04

**TEL: +94 11 2555243, FAX: +94 11 2555244**

**Jaffna Office: 140,Temple Road, Jaffna.**

London Office : 1st Floor, 315, High Street North Manor Park, London - E12 6SL Mobile : 0044 7905038050


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி திருவினையாக்கும் என்பதை நிரூபித்து அகவை ஐம்பதை எட்டிய அண்ணா தொழிலகம்



*கேள்வி:-* சுயதொழில் முயற்சி மூலம் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

*பதில்:-* எனக்கு ஆறு பெண் சகோதரிகள். நானும் தம்பியும்தான் எமது வீட்டில் ஆண்பிள்ளைகள். இந்நிலையில் குடும்பப் பாரத்தை நான் சுமக்க வேண்டி இருந்தது. எனவே என்னுடைய கல்வியை பதினெட்டு வயதிலேயே கைவிட்டு விட்டு தொழில்தேடி அலையத் தொடங்கினேன். இதன் பயனாக 1957 இல் கொழும்புத் துறைமுகத்தில் 'ரெலிகிளார்க்' வேலை கிடைத்தது. எனினும் எதிர்பார்த்த சம்பளம் இல்லாததால் அதனைக் கைவிட்டேன். பின்னர் லீலா அச்சகம், சரஸ்வதி ஸ்ரோர்ஸ், போன்ற இடங்களிலும் பணிபுரிந்து அவற்றிலும் உரிய சம்பளம் கிடைக்கவில்லை. இந்நிலையில் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து வீதிமேற்பார்வை உதவியாளராக வெயிலில் நின்று வேலை பார்த்தேன். அப்போது ஒருநாள் 'தம்பி முன்னுக்குக் கஷ்டப்பட்டால்தான் பின்னுக்கு நல்லாய் இருக்கலாம். தொழிலைக் கவனமாகச் செய் என்று யோகர் சுவாமியின் ஆசி எனக்குக் கிடைத்தது. அதன்பின்னர் 'மில்க்வைற்' அதிபர் கனகராசாவின் அறிமுகம் எனக்கு ஏற்பட்டது. அவரிடம் என் நிலையை எடுத்துக்கூறினேன். உடனேயே அவர் ''நீ என்னுடைய தொழிலகத்தில் பணி புரியலாம்'' என்று கூறினார். அவரும் என்மீது மிகுந்த கரிசனை கொண்டவராக விளங்கினார்.


**'அண்ணா' என்ற பெயரின்மூலம்....**

ஆயினும் நான் பொருளாதார ரீதியில் மிக விரைவாக உச்ச நிலையை எய்தினால் மட்டுமே எனது சகோதரிகளைக் கரை சேர்க்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது. இதனால் மில்க்வைற் அதிபரின் அனுமதியுடன், அவர் நடுவதற்காகத் தந்த பனம் விதைகளுடன் வவுனிக் குளத்திற்குச் சென்றேன். அங்கு காடு வெட்டி களனியாக்கும் பணியில் தனியாகவே ஈடுபட்டேன். ஆயினும் அதன்மூலம் கிடைக்கும் வருமானம் உடனடிப்பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவாது என நம்பினேன். இதனால் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பினேன்.

இந்நிலையில் எமது குடும்ப வைத்தியரான அண்ணாமலைப் பரியாரியார் சில மூலிகைகளைக் கொண்டு பற்பொடி தயாரிக்கும் முறையை எனக்குச் சொல்லித் தந்தார். அதன்பின்னர் எனது வீட்டில் பற்பொடி தயாரித்து கடைகளுக்கு விநியோகிக்கத் தொடங்கினேன். அண்ணாமலைப் பரியாரியாரின் நினைவாக அவருடைய பெயரையே பற்பொடிக்கு இட்டேன். அதுவே நாளடைவில் 'அண்ணா' என மாறிவிட்டது.

ஒருநாள் மில்க்வைற் அதிபர் தான் விநியோகிப்பதற்கு கோப்பி செய்துதர முடியுமா என்று கேட்டார். அதற்கு நான் முழு மனதுடன் சம்மதித்து அவர் கேட்ட கோப்பியை தயாரித்து வழங்கினேன். கடைகளுக்கு கோப்பியை அவர் விநியோகம் செய்யும்போது நானும் அவரது காரில் கூடவே செல்வேன். அவர் கடைகளுக்குச் செல்லாத சமயத்தில் சைக்கிளில் நானே கடைகளுக்குச் சென்று கோப்பியை விநியோகித்து வந்தேன். நாளடைவில் விற்பனை பெருகியதால் கோப்பி அரைக்கும் கிரைண்டர் ஒன்றை வாங்கினேன். அதன்பின்னர் தொட்ட தெல்லாம் துலங்கியது. சைக்கிளில் சென்று வியாபாரம் செய்த நான் படிப்படியாக கார், பொருள் சுமக்கும் வாகனங்கள் என்பவற்றில் வியாபாரம் செய்யும் அளவிற்கு நிலைமை மாறியது. பற்பொடி, கோப்பி என்பவற்றோடு மட்டுமே நிற்காது பல்வேறுவிதமான தயாரிப்புகளையும், பண்ணைகளையும் அண்ணா தொழிலகத்தின் மூலம் மேற்கொண்டேன்.

*கேள்வி:-* அண்ணா தொழிலகத்தின் ஏனைய தயாரிப்புகள் பற்றியும் அவற்றின் சமூகப்பெறுமானம் பற்றியும் கூறுங்கள்?



யாழ்.குடாநாட்டில் உள்ள சிறு குழந்தைக்கும்கூட 'அண்ணாகோப்பி' யைப்பற்றி நன்கு தெரியும். அத்துணை தூரம் தமிழ்பேசும் மக்களிடையே மட்டுமல்லாது இலங்கை முழுவதும் அண்ணா தொழிலகத்தின் தயாரிப்புகள் வேரூன்றி விட்டன. 1959 ஆம் ஆண்டு தன்னுடைய பணியை ஆரம்பித்த அண்ணா நிறுவனம் இன்று 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து கிளை பரப்பி, குடாநாட்டில் அசைக்க முடியாத பொருளாதார விருட்சமாக வேர் விட்டு நிற்கின்றது. இன்று அண்ணா தொழிலகம், அண்ணா விற்பனை அகங்கள், அண்ணா பண்ணை, அண்ணா இன்ரநஷனல் பிறைவேற் லிமிட்டட் என வியாபித்து நிற்கிறது அண்ணா நிறுவனம். உள்ளூர் உற்பத்தி களை ஊக்குவிப்பதோடு புதிய தொழில் முயற்சியாளர்களுக்கும் ஒரு கலங்கரை விளக்கமாக மிளிர்கின்ற அண்ணா தொழிலகத்தின் செயற்பாடுகள் பற்றி அதன் உரிமையாளரும், முதல்வரிசை தொழிலதிபருமான பொன்.நடராசா உதயன் வாசகர்களுக்காக வழங்கிய கருத்துக்கள் இங்கே பிரசுரமாகின்றன.

*பதில்:-* இன்று சமூகத்தின் தேவைகள் பல்கிப் பெருகி விட்டன. அவசரம் மிகுந்துவிட்ட நவீன உலகில் மக்கள் தமது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அண்ணா தயாரிப்புகள் செய்யப்படு கின்றன. மிளகாய்த்தூள், உழுந்துமா, குரக்கன்மா, கோப்பி, அரிசிமா, ஆட் டாமா, சொட்டுநீலம், வறுத்த அரிசி மா, திடீர்தோசைமா, கட லைமா, இடியப் பம் மா,



ஜீவாகாரம், ஊதுபத்திவகைகள் என்பனவெல்லாம் அண்ணா வின் தயாரிப்புகளாக மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளன. இவற்றை விட அண்ணா பண்ணை மூலம் கோழிவளர்ப்பு, பன்றி வளர்ப்பு, தாரா வளர்ப்பு என்பவற்றை மேற்கொள்கின் றோம். அத்தோடு எமது பண்ணையில் வாழை, தென்னை முதலான பயன்தரு மரங்களும் ஏனைய விவசா யப் பயிர்களும் பயிரிடப் பட்டுள்ளன.

அண்ணா தொழிலகம் மூலமும் அண்ணா பண்ணை மூலமும் நூற றுக்கு மேற்பட்டோர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். அதுதவிர உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருந்தே மூலப்பொருள்களை (பயறு, குரக்கன், கடலை முதலியன) கொள்வனவு செய்வதால் அவர்களும் எம்மால் பயனடைகிறார்கள். அத்தோடு அண்ணா நிறவனம் மூலம் நன்னெறிகளைப் போதிக்கும் இலவச சிறுநூல் வெளியீடுகளையும் மேற்கொள்கிறோம். அரிச்சுவடிகளையும் இலவசமாக அச்சிட்டு வழங்குகிறோம். இவையெல்லாம் அண்ணா தொழிலகத்தின் சமூகப்பெறுமானம் மிக்க நடவடிக்கைகள் என நம்புகிறேன்.

*கேள்வி:-* ஒரு நிறுவனம், அதுவும் யாழ்ப்பாணத்தில் 50 வருடங்களாக வெற்றிகரமாக இயங்குவது என்பது ஒருசாதனைதான். இவ்வாறு காலத்தை வென்ற நிறுவனமாக அண்ணா தொழிலகம் மிளிர்வதற்கான காரணம் எதுவென நீங்கள் எண்ணுகிறீர்கள்?

*பதில்:-* தக்கன பிழைக்கும் தன்மையே வெற்றியைத் தேடித்தரும் என்பதை எனது அனுபவத்தில் உணர்ந்துள் ளேன். காலமாறுதலுக்கேற்ப நாமும் நம்மை இசைவாக்கிக் கொள்ள வேண் டும். இத்தகைய இசைவாக்கல் தன்மை தான் போரின் நெருக்கடிகளுக்கு மத்தி யிலும் பல இடம்பெயர் வுகளுக்கு மத்தி யிலும் அண்ணா தொழிலகம் நிமிர்ந்து நிற்பதற்கு முக்கிய காரணி எனலாம்.

அத்தோடு வெறுமனே வியாபார நோக்கைமட்டுமே மையமாகக் கொள் ளாது சமூக நலனையும் நான் முன்னி லைப்படுத்தினேன். எப்போதும் சமூகநலனை முன்னிறுத்திச் செய் யப்படுகின்ற தயாரிப்புகள் எனக்கு ஆத்மதிருப்தியைத் தருவன. உதாரணத்துக்கு எமது தயாரிப்பான ஜீவா காரம் ஒரு இக்கட்டான காலப்பகுதி யில் யாழ்.மக்கள் இருந்தபோது தயாரிக்கப்பட்டது. அப்போது தென்னி லங்கையிலிருந்து எவ்வித போசாக்கு நிறைந்த உணவுப்பொருள் களும் வருவதில்லை. அதனால் நலி வுற்ற ஒருசமூகம் தோன்றும் அபாய நிலை எழுந்தது. இந் நிலையில் டாக்டர் செ.ஆனந்தவரதன், டாக்டர் இராமதாஸ் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் உள்ளூர் தானிய வகைகளைக்கொண்டு போசாக்கு நிறைந்த ஜீவாகாரத்தைத் தயாரித்தோம். இது குழந்தைகளுக்கு நிறையுணவாகவும் ஏனையோருக்கும் போசாக்குமிக்க உணவாகவும் அமைந்து எமது சமூகம் போசாக்குக் குறைபாட்டில் சிக்குவதை தவிர்க்க உதவியது. எமது தயாரிப்புகளிலேயே என் மனதுக்குப் பிடித்ததாக ஜீவாகாரத்தையே கூறுவேன்.

*கேள்வி:-* இடப்பெயர்வுகள் அநேக நிறுவனங்களை இல்லாமல் ஆக்கியது. ஆனால் நீங்கள் மட்டும் அதனைத் தாக்குப் பிடித்தது எவ்வாறு?

*பதில்:-* அண்ணா தொழிலகம் அபரிதமான வளர்ச்சியை எய்தியதால் பல இடங்களிலும் எமது தொழிலகங்களையும் விற்பனைக்கூடங் களையும் நிறுவியிருந்தோம். எனவே இடப்பெயர்வுகளின்போது பொருளா



கலாநிதி க.கனகராசா பூமாலை சூட்டுகிறார்

தார ரீதியில் பெரும் இழப்பினைச் சந்தித்தாலும் எம்மோடு கூடவே வந்த தொழிலாளர்களின் உதவியால் அந்தந் தப் பிரதேசங்களில் இருந்த தொழிலகங் களை இயக்கி தொடர்ச்சியாக அண்ணா தயாரிப்புகளை மேற்கொண்டோம்.

*கேள்வி:-* இனிவரும் காலங்களில் அண்ணா தொழிலகத்தின் செயற்பாடு எப்படி அமையும்?

*பதில்:-* போட்டி மிகுந்த வியாபார யுகத்தை தனக்கே உரிய தனித்துவத் தோடு அண்ணா தொழிலகம் எதிர்கொள் ளும். அத்தோடு மக்களின் தேவையை அறிந்து தரத்துக்கு மட்டுமே முன்னு ரிமை கொடுக்கும். எமது தயாரிப்புகளை வேறுநிறுவனத்தின் தயாரிப்புகள் ஈடுசெய்துவிட முடியா தென்றே எமது மக்களும் எண்ணுகின்ற னர். அவர்களின் நம்பிக்கையை பொய்யாக்காத வகை யில் எமது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ந்தும் மக்கள் நலனை முன்னிறுத் தியதாகவே அமையும். இதுவரை கால மும் இவ்வாறு நுகர்வோர் நலனை முதன் மையாகக் கொண்ட தாலேயே வெளிநாட் டுப் பிரமுகர்களும், நமது நாட்டின் தொழில்துறை அமைச்சர்களும் பல்வேறு காலப்பகுதிகளில் அண்ணா தொழிலகத்துக்கு விஜயம் செய்து எமது தயாரிப்புக்களைக் கண்டு வியந்து பாராட்டியுள்ளனர். எனவே கால மாற்றத் துக்கேற்ப எமது தொழிற்பாடுகளை நவீனப்படுத்தினாலும் மக்கள் நலன், தரம் என்பவற்றை எக்காலத்திலும் அண்ணா தொழிலகம் கைக்கொள்ளும். காலத்தின் சவாலை எதிர்கொண்ட அண்ணா தொழிலகத்தின் செயற்பாடு களை 'அண்ணா பொன் ஏடு' என்ற பெய ரில் நூலுருவாக்கியுள்ளோம். இந்நூல் என் றென்றைக்கும் எமது மண்ணில் அண்ணா தொழிலகம் செய்த பணிகளைப் பகரும் ஒரு பதிவாக மிளிரும் என்பதே என் நம்பிக்கை.

## "சமூக நலனையும் முன்னிறுத்தி எனது நீறுவனத்தை வளர்த்தேன்"

*****************

நேர்காணல்: ஒளண்யன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்தினியம்மா, கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் என்பவற்றில் கல்வி கற்றவர். சைவப்புலவர், பாலபண்டிதை ஆகிய பட்டங்கள் பெற்ற இவர், பேராதனைப் பல்கலைக்கழகச் சிறப்புப் பட்டதாரியும் ஆவார்.

1960 களின் முற்பகுதியில் ஈழத்துத் தமிழ்ப் புனை கதைத் துறையில் பிரவேசித்த இவரது சிறுகதைகள் மற்றும் கவிதைகள் அந்த வேளைய ஈழத்தின் முன்னணிப் பத்திரிகைகளான ஈழநாடு, சுதந்திரன், தினகரன் என்பவற்றிலும், சஞ்சிகைகளான கலைச்செல்வி, நங்கை என்பவற்றிலும் வெளிவந்துள்ளன.

சிதம்பரபத்தினி என்ற புனைபெயரில் தமது பல ஆக்கங்களைப் படைத்த இவர் சித்தி, பிரக்ஞா ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார். 'நிஜத்தின் நிழல்' இவரது சிறுகதைத் தொகுதியாகும்.

இசைத்துறையில் பிரபல்யமான திலகநாயகம்போல் இவரது கணவராவார். இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியான பத்தினியம்மா திலகநாயகம்போல் பிரதேச செயலர், மேலதிக அரச அதிபர் ஆகிய அரச உயர்பதவிகளை வகித்து ஓய்வு பெற்றுள்ளார்.

அவரது "இளந்துறவி" சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

# இளம்துறவி

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 104**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதி. விடுதிகளுக்கு இடையே சற்று வெளியான ஓர் இடம். அங்கே, காவியுடை தரித்த துறவியொருவர் மௌனியாய் அமர்ந்திருந்தார். வழுவழுப்பும் குழுகுழுப்புமாய்க் காணப்பட்ட அவர் தோற்றம் அவர் ஓர் இளந்துறவி என்பதைப் பறைசாற்றியது. வெயிலோ கொடூரமாகக் காய்ந்து கொண்டிருந்தது. மாணவர்களோ குடையிருந்தும் வெளியில் வர அஞ்சினர். ஆனால் துறவியாரோ அசையவில்லை. அவர் தவத்திலேயே நிலைத்திருந்தார். பாம்பொன்று அவருடலில் ஊர்ந்து சென்றது. அவரை மரம் என்று எண்ணியோ என்னவோ பசுவொன்று அவருடலில் தன் கொம்புகளாற் குத்தித் தினவெடுத்தது. அப்பொழுதுங்கூடத் துறவியாரின் நிட்டை குலையவேயில்லை, இத்தகைய உண்மைத் துறவிகளை நாம் இதிகாச புராணங்களிற் தான் கேட்டிருக்கிறோம். இந்த நூற்றாண்டிலுமா இத்தகைய உண்மைத்துறவி? ஆமாம் வள்ளுவர்ப் பெருந்தகை கூறியவாறு அவர் உற்ற நோய் நோன்றுகிறாரே! உயிர்க்கு உறுகண் செய்யவில்லையே!

திடீரென்று துறவியாரின் மேல் பூமாரி பொழிந்தது. பொழிந்தவர் தேவர்கள்தான். ஆமாம் இளந்துறவியாரின் தவத்தை அவர்களால் வியக்காமல் இருக்க முடியவில்லை. தேவர்களின் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் ஊற்றெடுத்து மழையாகப் பொழிந்தது. பகீரதன் பூவுலகிற்குக் கங்கையைக் கொண்டு வந்தபொழுது இப்படித்தான் இருந்திருக்குமோ!

பச்சைப் பசும் புற்களிற் படிந்திருந்த மழைத்துளிகள் மரகதப் படுக்கையிற் சிறிய முத்துக்களா! இல்லை, இயற்கைத் தாயின் ஆனந்தக் கண்ணீரா என ஆச்சரியப்படும்படி ஒளி வீசின. செம்புலப் பெயல்நீர் மாணிக்க ஆறா! இல்லைச் செம்பாம்புதானா என வியக்கும்படி வளைந்தும், நெளிந்தும் ஓடிக்கொண்டிருந்தது. அவற்றிடையே காணப்பட்ட தார்றோட்டோ துவண்டு கிடக்கும் கருநாகம் போல் அசைவற்றிருந்தது. சுற்றவர மரகதக் குவியல்களாகவும் கார்மேகக் கூட்டங்களாகவும் காட்சிதந்த மலைகளிடையே காணப்பட்ட மூன்று விடுதிகளும் பரமசிவன் எரித்த முப்புரங்களை நினைவு படுத்தின. இத்தனைக்கும் நடுவில் அமைதியாக வீற்றிருந்த துறவியாரோ 'பாசுபதாஸ்திரம்' பெறத் தவம் செய்த அருச்சுனன் போல் தவத்தில் உறுதியாய் இருந்தார். ஆமாம், அவருக்கு இவ்வுலக நினைவே கிடையாது.

மாலை ஐந்து மணியிருக்கும். துறவியார் மெதுவாகக் கண்களை மலர்த்தினார். அப்பொழுது காதலியைத் தேடி வந்த காகம் ஒன்று கா! கா! என்று கத்திக் கொண்டே அவர் அருகில் வந்தமர்ந்தது.

''ஏன் மகனே புலம்புகின்றாய்?'' அன்புடன் கேட்டார் துறவியார்.

''என் காதலி இன்று இவ்விடத்தில் என்னைச் சந்திப்பதாகக் கூறினாள். ஆனால் அவளைக் காணவில்லையே. அதனாற்றான்.... ''

துறவியார் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

மீண்டும் காகம் கூறியது:

''என்ன இருந்தாலும் இந்தப் பெண்களை நம்பவேகூடாது; இல்லையா?''

துறவி மௌனம் சாதித்தார். காகம் தொடர்ந்தது.

''பெண்கள் சாகச வார்த்தைகளால் ஆண்களை மயக்கிவிட்டுப் பின் எத்தனை ஆண்களை ஏமாற்றுகிறார்களோ? சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே என்று தெரியாமலா முன்னோர் கூறியுள்ளார்கள்'' எனக் காகம் கூறியது.

துறவியார் மெல்ல நகைத்தார். 'பொருள் தெரியாமல் பாடல் தெரிந்து என்ன பயன்? 'சேலைகட்டிய மாதர்' என்று யாரைக் குறிப்பிட்டார்கள் என்பது இவனுக்குத் தெரியவில்லையே' என வருந்தினார்.

துறவியார் எதுவும் பேசாமலிருக்கவே காகம் ஆச்சரியப்பட்டது.

''ஆமாம், நீங்கள் யார்? ஏன் இங்கே தனியே இருக்கிறீர்கள்?''

''நன் இங்கே தனிமையிலேதான் இனிமைகாண்கிறேன்.''

''தனிமையிலே இனிமையா'' வியப்புடன் கேட்டது காகம்.

''ஆமாம் நான் ஒரு துறவி''.

''உங்களையும் யாராவது பெண்கள் ஏமாற்றினார்களா?'' துறவியார் புன்னகை புரிந்தார்.

''மகனே ஒருவர் மற்றவரை ஏமாற்றுவது தவறுதான். ஆனால் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதுதான் மிகப் பெரிய தவறு. என்னை எவராலும் ஏமாற்ற முடியாது. என்னை நானே ஏமாற்றிக் கொள்ளவும் விரும்பவில்லை. அதனாற்றான் இப்புனித துறவைப் பூண்டேன். இன்று பலர் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள். ஏன், நீ கூட உன் காதலியைக் குறைகூறுகிறாய். அவளிடம் உண்மை அன்பிருந்தால் அவளுக்கு என்ன தீங்கு நேர்ந்ததோ என்று வருந்தியிருக்க மாட்டாயா?

(14 ஆம் பக்கம் பார்க்க...)

# அன்பு செலுத்தி அறம் செய்து வாழ்ந்தால் மனித வாழ்க்கை மாண்புறும்

பொதுவாக எதுவுமே நிலைக்காது என்ற உணர்வு ஒவ்வொரு மனிதனுக்கும் வயது ஏற வளர்ந்து கொண்டே போகிறது. காரணம், அவன் முதுமையை அடைய அடையத்தான் தன் வாழ்வு பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கிறான்.


ஆரம்பக் கட்டத்தில் 'தான்' என்ற ஓர் அகங்காரம் இருக்கும்போது மனிதன் எதையுமே எண்ணிப் பார்ப்பதில்லை; நிலையாமை பற்றி உணராமல் எதை எதையோ எண்ணி விடுகிறான், பேசிவிடுகிறான். பின்னர், நாள்கள் போகப் போகத்தான் அவன் நிலையாமை பற்றி உணரத் தொடங்குகிறான்.

நிலையற்றவைகளையெல்லாம் நிலையானவை என்று ஏன் எண்ணுகிறான்? இது அறிவற்ற நிலைமை என்பதைவிடவும் தாழ்ந்த ஒன்றின் காரணத்தால்தான் என்பது தெளிவாகிறது. இவ்விதம் புல்லறிவு - அதாவது கீழான அறிவுடையவராக இருத்தல் என்பது வாழ்க்கையின் இழிந்த நிலையாகுமேயன்றி வேறன்று.

பண்பாட்டுக்கு மதிப்பு அளிக்காது பணத்திற்கே மதிப்பளித்துப் பண்பாடற்றவனையும் ஏற்றிப் போற்றுகிறார்களே இந்தப் பணம் நம்மிடம் நிலைத்து நிற்பதா? கூத்தாட்டம் முடிந்ததும், கூத்து நடந்த இடத்தைவிட்டு மக்களெல்லாம் மொத்தமாகக் கலைந்து போவார்களே அது போல் இந்தப் பணமும் சென்றுவிடும். இதையெல்லாம் இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் உணரவேண்டும். பணம் வருவதும் போவதும் இவ்விதம்தான்; ஆனால் பண்பு இவ்விதமல்ல என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

**"நில்லாத வற்றை நிலையின என்று உணரும் புல்லறிவு ஆண்மை கடை"**

**"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம் போக்கும் அதுவிளிந் தற்று"**



**பாத்திரம் அறிந்து பிச்சையிடுக!**

வீதியில் சென்ற என்னை
இடையிலே மறித்திட்ட முன்பின் அறியாவொருவன்
பணிவோடு என்னைக்கேட்டான்
பசிக்கிறது உணவுண்ணப் பணம் தருமாறு
நலிவான அவன் தோற்றம் என் மனதில் அனுதாபம் உருவாக்க
சட்டைப்பையில் இருந்தெடுத்து ரூபா நூறைப்
பரிவோடு அவன் கரம் திணித்தேன்.
கால் மணிநேரம் கழித்தெனக்கு
கிட்டிற்று கசப்பான அனுபவம் ஒன்று
இரந்து பெற்ற என் பணத்தில் வாங்கிய
கால்போத்தல் சாராயம் அவன் கையொன்றில்
மறு கையில் பற்றவைத்த சிகரட்டுடன்
சலனமெதுவுமின்றி என்னைத் தாண்டி அவன் சென்றான்.
அக்காட்சி கண்டு மனம் ஆத்திரத்தில் பொங்கியது.
வெளிப்படுத்த முடியாத உணர்வுகளின் சங்கமத்தால்
அவ்வேளை முடிவெடுத்தேனினி
ஒரு போதும் வெறுக்கும் இரங்குவதில்லை என்று
இரக்கமொடு ஈகையும் மனிதருக்கு அவசியமே அவற்றை
தகுதி கண்டு ஈதலே தர்மமதாய் அமைவதுண்மை!

**அல்வாய்சிவமைந்தன்.**

செல்வத்தின் நிலையற்ற தன்மையை ஒவ்வொருவரும் உணர வேண்டும். செல்வம் ஒருவரிடம் வந்து சேருகிறதென்றால் அந்தச் செல்வம் நிலையற்றது என்பதையுணர்ந்து தம்மிடமிருந்து அது செல்லும் முன்னர் - நிலைத்து நிற்கும் அறச் செயல்களைச் செய்து விடுவதே சிறப்பு.

இது போன்றுதான், நமது வாழ்க்கை நிலையும். ஒவ்வொரு நாளும் நம்மை விட்டுப் பிரிந்து செல்லுவது என்பதை நாம், நமது வாழ்வின் ஒருபகுதி என்று உணர வேண்டும். நாள்கள் ஒவ்வொன்றாகச் செல்லச் செல்ல நமது வாழ்வின் ஒரு பகுதி சென்றுவிடுகிறது என்ற உணர்வு ஏற்பட வேண்டும். இறப்பு என்பது, உயிர் உடம்பிலிருந்து பிரிந்து செல்வதைப் பொருள்படுத்துகிறது. ஆக, ஒவ்வொரு நாளும் செல்லுவது என்பது உயிரை உடம்பிலிருந்து பிரித்திட அறுக்கும் வாளாக உள்ளது என்பதை உணர்ந்து, செய்ய வேண்டிய அறச் செயல்களை, இந்த நிலையாமையை உணர்ந்து விரைந்து செய்வதுதான் இல்லறம் மேற்கொண்டிருப்பவர்களின் கடமை என்பதை வள்ளுவப் பெருமான் வலியுறுத்திக் கூறுகிறார்.

**"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால் அற்குப ஆங்கே செயல்"**

**"நாள் என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும் வாள் அது உணர்வார்ப் பெறின்"**

உயிர் எவ்விதம் பிரிந்து செல்லுகிறது? நா மேலெழ முடியாமல் அழுத்தி அதன் பின் விக்கல் வந்துதானே பலருக்கு உயிர் பிரிகிறது? இவ்விதம் நாவை அடக்க, விக்கல் மேலே எழுவதற்கு முன்னே - அதாவது இறப்பு வருவதற்கு முன்னரே நல்ல அறச் செயல்களை மிகவும் விரைந்து செய்வது இன்றியமையாததும் சிறப்பைத் தருவதுமன்றோ!

அறச் செயல்களைச் செய்யக் காலதாமதம் செய்யவே கூடாது. விரைந்து செய்ய வேண்டும். நேற்று இருந்தவனை இன்று பார்க்க முடியாத நிலையில் இறப்பு வந்து அவனை அணைத்துக்கொண்டு போகிறது. வாழ்வின் நிலைமை இது தானே! அதனால்தான்,

**"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப்படும்"**

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு"**

என்று வள்ளுவர் பெருமான் கூறுகின்றார்.

பறவை தான் தங்கியிருந்த கூட்டை விட்டுத் திடீரென்று பறந்து சென்று விடுகிறது. இதைப் போன்றுதான் - அதாவது கூட்டைவிட்டு விட்டுத் திடீரென்று பறந்து சென்றுவிடும் நிலையில்தான் உடம்புக்கும் உயிருக்குமுள்ள தொடர்பு. என்றோ நிரந்தரமற்ற இந்த உயிரானது உடம்பை விட்டுச் செல்லும் முன்னர் நிலையான அறச் செயல்களையெல்லாம் செய்து கொள்ள வேண்டும். இவ்விதம் செய்து நிலையான புகழைப் பெறுவது இல்லற வாழ்க்கை மேற்கொள்ளுபவரின் கடமை என்பதை வள்ளுவர் பெருமான் தெளிவுறுத்திக் கூறுகிறார்.

**"ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப கோடியும் அல்ல பல"**

**"குடம்பை தனித்து ஒழியப் புள்பறந் தற்றே உடம்போடு உயிரிடை நட்பு"**

தூங்கச் சென்றவன் எழுந்து வந்தால் தான் உயிர் பிழைத்து மீண்டும் வந்தான் என்பது பொருள். தூங்கச் சென்றவன் பெருந் தூக்கமாகத் தூங்கிவிட்ட நிகழ்ச்சிகள் எத்தனை எத்தனையோ!

உண்மையில் இறப்பு இத்தகையது தான்; தூங்குவது போல்தான் சாக்காடு. பின் தூங்கி விழிப்பது போன்றதுதான் இந்தப் பிறப்பும்.

இவையெல்லாவற்றையும் உணர்ந்து அறவழியில் நின்றால் இல்லறம் இனியதாகத் திகழும். எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்? எல்லாமே நிலையாமைதான் என்பதையும் உணர்ந்து நடந்தால் நலமே தருவதாக அமையுமல்லவா!

இந்தப் பெரிய உடம்பில் எங்கோ குடியிருந்த ஓர் உயிருக்கு நிலையான இடம் (வீடு) கிடைக்காமல்தான் செல்லுகிறது போலும்! இந்த உடல் உயிருக்கு நிலையான இடமல்ல என்பது விளக்கமாகிறதல்லவா!

**"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"**

**"புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு"**

இவையனைத்திலுமிருந்து நிலையாமைதான் இந்த வாழ்க்கை என்பது தெளிவாகிறது. இருந்தாலும், இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருப்போர் இவையனைத்தையும் உணர்ந்து நல்லவைகளை - அறச் செயல்களை விரைவில் செய்து சிறப்படைய வேண்டும்.

**நன்றி:- வள்ளுவர் கண்ட இல்லறம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக உப்பு மட்டுமன்றி பொட்டாசியச் சத்துக் குறைவும் உயர் குருதி அமுக்கம் அதிகரிக்கக் காரணமாகிறது

மருத்துவப் பீடாதிபதி பேராசிரியர் க.சிவபாலன்

சுகவாழ்வுக்கான உணவு 02

இரைப்பை வெறுமையாக இருக்கும் போது ''கேர்லின்'' எனும் ஓமோன் இரைப் பையால் சுரக்கப்படுவதாகவும் அது பசி யைத் தூண்டுவதாகவும் கொழுப்புப் பொருளை உடல் பயன்படுவதைக் குறைப் பதாகவும் அண்மைக்கால ஆய்வுகள் காட்டி யுள்ளன. ஒழுங்காக உண்ணாதவிடத்து இந்த ஓமோன் அதிகரித்து உண்ணலை அதி கரிக்கச் செய்வதாகக் கருதப்படுகின்றது.

கவர்ச்சியான, உருசியான உணவுப்பண் டங்கள் கண்முன்னே இருக்கும் போது உண்பதற்கான தூண்டல் பசியாகவோ உடல் தேவையாகவோ இருப்பதில்லை. உண்பதன் மகிழ்ச்சியே காரணமாகின்றது. மனித உடல் இத்தகைய செயற்கையான உணவுகளை உடலின் தேவைக்கேற்ப கட் டுப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருக்க வில்லை.

இறுதியாக, அதிக உணவை இரைப்பை யினுள் திணிக்கும்போது இரைப்பை பெருத்து மேலதிகமாக உண்பதற்குக் காரணமா கிறது. சிறிதளவு உண்பவரின் இரைப்பை சிறிதாகிவிடுகிறது.

**உயிர்ச்சத்து "டி"**

அண்மைக்காலம்வரை இவ்வுயிர்ச்சத்து எலும்புடன் மட்டுமே தொடர்புடையதா கக் கருதப்பட்டது. இப்போ பல இழையங் களின் ஆரோக்கியமான செயற்பாட்டுக்கு இது அவசியமெனக் கண்டறியப்பட்டுள் ளது. இவ்வுயிர்ச்சத்து போதியளவு கிடைக்கா விட்டால் நுரையீரல் நோய்கள், இதயநோய் கள், தொற்றுநோய்கள், புற்றுநோய்கள் உட்படப் பல நோய்கள் இலகுவில் ஏற் படலாமென நம்பப்படுகிறது.

எமக்கு இலகுவாக அதிக அளவில் கிடைக்கும் சூரிய ஒளி எமதுதோலில் படும் போது இவ்வுயிர்ச்சத்து உருவாக்கப் படுகிறது. ஆனால் உடல் முழுவதையும் ஆடையால் மூடியும் வெயிலில் விளையாடு வதைத் தடுத்தும் எமது பிள்ளைகளுக்கு இவ்வுயிர்ச்சத்துக் கிடைப்பதைத் தடுப் பதுடன் பெரியவர்களும் உள்ளக வேலை களை சூரிய ஒளிபுகாது குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து செய்வதுடன் வாகனங் களையும் பயன்படுத்துவதால் இவ்வுயிர்ச்சத் தைப் போதியளவு பெற்றுக்கொள்ளாமல் நோய்வாய்ப்படக்கூடிய நிலை உருவாகி வருகிறது.

**உயர் குருதியமுக்கமும் உப்பும்**

உயர் குருதியமுக்கம் உள்ளவரில் 95 வீதமானவருக்கு இனங்காணக்கூடிய காரணம் இருப்பதில்லை. இவர்களின் குரு தியமுக்கம் கூடியதற்குக் காரணம் உடற் செயற்பாட்டிற்கும், குறிப்பாகச் சிறுநீரகச் செயற்பாட்டுக்கும் சூழற்காரணிகளுக்கும் இடையே ஏற்படும் குழப்பநிலையே எனக் கருதப்படுகிறது. நெடுங்காலமாக இதற் குக் கறியுப்பு (சோடியம்) அதிக அளவில் உண்பது ஒரு முக்கிய காரணமெனக் கரு தப்பட்டது. அண்மைக்கால ஆய்வுகள் அதிக உப்பு மட்டும் காரணமல்ல என்றும்

## உயிர்ச்சத்து 'டி' குறைபாடு பல நோய்கள் உருவாகக் காரணமாகின்றது

பொட்டாசியம் குறைவாக இருப்பதும் சேர்ந்தே குருதியமுக்கத்தைக் கூட்டுவ தாக எடுத்துக் காட்டியுள்ளன.

இயற்கையில் கிடைக்கும் உணவுகள்- காய் கனிகள் - அதிக பொட்டாசியத்தை யும் மிகச் சிறிய அளவில் மட்டுமே சோடி யத்தையும் கொண்டிப்பதாகவும் இத்தகைய உணவை உண்பவரிடையே உயர் குருதிய முக்கம் ஏற்படுவதில்லை எனவும் கண்டறி யப்பட்டுள்ளது. நவீன உணவு பதனிடல் களில் அவற்றைப் பழுதாகாமல் சந்தைப் படுத்த அதிக கறியுப்பு சேர்க்கப்படுகிறது. உதாரணமாக பொதி செய்யப்பட்ட 60 கிராம் இறைச்சி 2 கிராம் உப்பையும் தகரத் தில் அடைக்கப்பட்ட கோழி சூப் 3 கிராம் உப்பையும் கொண்டிருக்கும். இவற்றில் பொட்டாசியம் புறக்கணிக்கத்தக்க அள விலேயே உள்ளது. மாறாக ஒரு கோப்பை அவித்த பருப்பில் பெருமளவு பொட்டாசி யமும் மிகச் சிறிய அளவு உப்பும் காணப் படும். மேலும் பழங்களும், காய்கறிகளும் பெருமளவு பொட்டாசியத்தையும் சிறி தளவு உப்பையுமே கொண்டிருக்கும். காய் கறி எனும்போது மரவள்ளி, உருளை போன்ற கிழங்கு வகைகளைக் கருதக் கூடாது. அவை தானியங்கள் போன்று பெரும் உணவுப் பொருள்களாகும். இயற்கை உணவுகளை உடனுக்குடன் சமைத்து உண் ணும் மக்களின் உள்ளெடுக்கும் பொட் டாசியத்துக்கு சோடியம் (உப்பு) விகிதம் 3 - 10 வரை காணப்பட, நகரமயமாக்கப் பட்டுப் பதனிடப்பட்ட உணவுகளை உட் கொள்பவரின் பொட்டாசியத்துக்கு சோடி யம் (உப்பு) விகிதம் 0.4 இலும் குறை வாகவே உள்ளது. அதாவது இவர்கள் பொட்டாசியத்தை விடப் பல மடங்கு அதிக சோடியத்தை உள்ளெடுக்கின்றனர்.

மனித சிறுநீரகம் சோடியத்தை சேமிக் கவும் பொட்டாசியத்தை வெளியேற்ற வும் இசைவாக்கப்பட்டுள்ளது. இது மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து உண்ட உணவுக்குப் பொருத்தமாக இருந்துள் ளது. நவீன உணவுப்பதனிடலும் உணவுத் தெரிவும் பொட்டாசியத்துக்கு சோடியம் (உப்பு) விகிதத்தை மாற்றிவிட்ட நிலை யில் சிறுநீரகத்தின் செயற்பாடு மாற்ற மடையாதிருப்பது உயர் குருதியமுக்கத் துக்குக் காரணமாகின்றது. பழங்கள், இலை வகை, காய்கறிகள், பருப்புகள் போன்றவை



## ருசியான, அழுத்தமற்ற, கிடைக்கக்கூடிய உணவுத் தெரிவு மகிழ்ச்சியான அனுபவமாகும்

உண்ணப்படும்போது அதிக பொட்டாசியம் கிடைப்பதால் குருதியமுக்கம் சீராகிறது.

**உணவின் சுவையூட்டிகளின் பங்கு**

எமது உடலின் செயற்பாடுகளின் போது தவிர்க்க முடியாமல் உருவாகும் சில ஒட்சி யேற்றும் பொருள்களின் தாக்கத்தால் இழை யங்கள் சிதவடைந்து நோய்க்காளாவதோடு வயோதிபத்துக்கும் காரணமாக அமைவதாக சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். உணவு டன் உண்ணப்படும் உயிர்ச்சத்து ''சீ'' போன்ற தாழ்த்தும் பொருள்கள் மேற்படி தாக்கத் திலிருந்து பாதுகாப்பதாகவும் புளி போன்ற இயற்கைச் சுவையூட்டிகளில் இத்தகைய இயல்பு காணப்படுவதால் அவை ஆரோக் கியத்தை மேம்படுத்துமென்றும் அவ் வாராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

**சுகவாழ்வுக்கான உணவு**

சுகம் அல்லது ஆரோக்கியம் என்பது உடல், உள, சமூக பொருளாதார பூரண நன் நிலை ஆகும். ஆனால் தற்போது ஆரோக் கிய மேம்பாட்டுக்காக அறிவுறுத்தப்படும் உணவுக் கட்டுப்பாடு, நோயாளரை அல்லது இனங்காணப்பட்ட பாதிப்பு நிலையிலுள்ள வரை மட்டும் பிரத்தியேகமாகக் குறிப்பதால், அவர் உளரீதியாகவும் சமூக ரீதியாகவும் தனிமைப்படுத்துவதால் ஏற்படும் மன அழுத்தத்தினால் அல்லது கட்டுப்பாடு கைவிடப்படுவதால் இருவகை களிலும் ஆரோக்கியக் கேடாகவே அமை கிறது.

உணவுப்பழக்கத்தை அல்லது உணவுத் தெரிவை ஒருநாள் வைத்திய ஆலோசனை யாலோ அல்லது தனிநபராலோ மாற்ற முடி யாது. மேலும் உணவு அழுத்தமற்ற, சாத் தியமான, ருசியான, மகிழ்ச்சியான அனு பவமாக இருக்க வேண்டும்.

இதுவரை [illegible] களின்படி ஆ[illegible] பின்வருமாறு அமைய வேண்டும்.

★ நன்கு தீட்டிய, பதனிடப்பட்ட, சக்தி செறிவான பொருள்களைக் கொண்டு உருவாகும் தின்பண்டங்கள் உணவுசார் நோய்களுக்கு ஏதுவாகின்றன. ஆனால் அதிக நார்ப்பொருள் கொண்ட இயற்கை உணவுகள் ஆரோக்கியமானவை.

★ சக்தி செறிவான வேக உணவுகளை உண்ணவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அதைப் பல சிறுபாகங்களாக உண்பது பாது காப்பானது. ஆனால் மொத்தமாக உணவின் அளவு பரிந்துரைக்கப் பட்ட சக்தி அளவுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

★ உணவு வேளையில் உண்பதைத் தவிர்ப்பது அல்லது ஒழுங்கற்ற உண் ணல் உகந்ததல்ல. இடையிடையே விரத மிருப்பதில் சில நன்மைகள் இருப்பதா கச் சில ஆய்வுகள்காட்டினாலும் விரதவேளை யில் சக்தி செலவாகும் செயற்பாடுகளில் ஈடுபடுதல் பாதிப்பை ஏற்படுத்தும்.

★ காலை உணவைத் தவிர்ப்பது உடற் பாதிப்பை மட்டுமல்லாது உளச்செயற்பாடு களிலும் கற்றலிலும் பின்னடைவை ஏற் படுத்தும்.

★ உப்பில்லா உணவை உண்பதை விடக் குறை உப்பும் அதிக பொட்டாசியமும் கொண்ட உணவை உண்பது ஆரோக் கியமானது, சுவையானது, மகிழ்வானது.

★ உணவில் இழையங் கள் ஒட்சியேற்றப் படு வதைத் தடுக்கக்கூடிய தாழ்த்தும் பொருள்கள் இருப்பது உகந்தது.

★ உடலுக்குத் தேவை யான காபோவைத ரேற்றுக் கள், நிரம்பிய மற்றும் நிரம் பாக் கொழுப்பு அமிலங் கள், புரதம், உயிர்ச்சத்துக் கள், கனியுப்புக்கள், நார்ப் பொருள் கொண்ட சமவிகித உணவை ஒவ்வொரு தடவையும் அளந்து உண்ண முடியாது. பல்வேறு உணவு வகைகளை மாறி மாறி உண்பது தேவையான சத்துக்களை எளிதில் பெற உதவுவதோடு ஒவ்வொரு தடவையும் புதிய உணவை உண்பது போன்ற மகிழ்வையும் தரும்.

★ உட்கொள்ளும் உயிர்ச்சத்து 'டி' அல் லது சூரிய ஒளிதரும் உயிர்ச்சத்து 'டி' தேவை யான அளவில் கிடைக்க வேண்டும்.

யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கத்தின் முத லாவது வருடாந்த அமர்வின் கருத்தரங்கு ''உணவும் உணவுப் பழக்கவழக்கங்களும்'' எனும் தலைப்பில் அமைந்தது. அப்போது வெளிப்பட்ட பரிந்துரைகள் கீழே தொகுத் துத் தரப்பட்டுள்ளன.

**பொருளாதார நோக்கில்:-**

★ உள்ளூர் உணவு உற்பத்தியை அதி கரித்து இறக்குமதியைக் குறைக்கவேண்டும்.

★ எம்மூர் தட்பவெப்ப நிலைகளுக் கேற்ற பயிர்களை ஆய்ந்து விருத்தி செய்ய வேண்டும்.

★ தாவரப் புரதத்தை விலங்குப் புரத மாக மாற்றாமல் அப்படியே உண்பது இலாப கரமானது. கோழி இறைச்சியின் ஒரு கிராமுக் குத் தாவரப்புரதம் 5 கிராமும் மாட்டிறைச் சியின் ஒரு கிராமுக்கு 12 கிராம் தாவரப் புரதமும் தேவையாகின்றது.

★ வீட்டுப் பெண்களுக்கும் பாடசாலை மாணவருக்கும் கொள்வனவு மற்றும் போசாக்குப் பற்றிக் கற்பிக்க வேண்டும்.

★ உள்ளூர் உணவுப் பொருள்களைக் கொண்டு விரைவாகத் தயாராகக்கூடிய உடன் உணவுகளை உற்பத்திசெய்யும் வழிகளைக் கண்டறிய வேண்டும்.

★ கிடைக்கும் உள்ளூர் உணவுகளை [illegible]யதாக கொள்கை மாற்றம் ஏற் படுத்த வேண்டும்.

**கடலுணவு பற்றி:-**

★ இயற்கை முதிரைக் கற்கள் நிறைந்த நீண்ட கரையோரத்தை எமக்களித்துள்ளது. இது கணிசமான மீன்பிடி வளத்தைத் தந்துள்ளது.

★ கிடைக்கும் கடலுணவை முற்றாகப் பயன்படுத்தும் வகையில் கடலுணவுத்



தெரிவு தொடர்பில் மக்களிடையே மனமாற் றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

★ கடலுணவைப் பழுதாகாமல் சேமிப் பதற்கான முறைகளை முன்னேற்ற வேண் டும். உப்பிட்டுக் காயவைப்பதற்குப் பதிலா கப் புகையூட்டல், நொதிக்க வைத்தல் மற் றும் அவித்துக் காயவைத்தல் போன்றவை.

**விலங்குணவு பற்றி:-**

★ போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லா விட்டால் ஈக்கள் மொய்க்காத, கிருமிகளற்ற, தரமான விலங்குணவைப் பெறுவது கடினம்.

★ தரமான விலங்குணவுத் தயாரிப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.

★ கொலைக்களம், கையாடல், களஞ்சியப் படுத்தல், கொண்டுசெல்லல் எனும் எல்லா நிலைகளிலும் தரத்தை உறுதிப்படுத்த உரு வாக்கப்பட்ட சட்டங்கள் கடுமையாக அமுலாக்கப்பட வேண்டும்.

★ பதனிடலுக்கான வசதிகள் அதிகரிக்கப் பட வேண்டும்.

★ மக்களுக்கு சமத்துவமான விநியோகத் துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். குறிப்பாக பால் சேகரிப்பும் விநியோகமும் மேம்பட வேண்டும்.

**போசணை நோக்கில்:-**

★ எமது பாரம்பரிய உணவு சிறந்த சம விகித உணவாக எமக்குத் தேவையான நார்ப் பொருள் உட்பட எல்லாப் போசணைகளை யும் அடக்கியிருந்தது.

★ அரிசியுடன் பருப்பைச் சேர்த்து தர மான புரதம் பெற்றோம்.

★ அதிக பாலைப் பயன்படுத்தினோம்.

★ இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் ஏற்பட்ட உணவுத்தட்டுப்பாட்டின்போது பட் டினியைத் தவிர்க்கப் பயன்பட்ட உணவு களும் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங் களும் ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங் களை நோக்கி எம்மைத் தள்ளிவிட்டது போல் தோன்றுகிறது.

★ பலவகையான உணவுகளை உண்பதால் எல்லாச்சத்துக்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

காலை உணவு எல்லோருக்கும் குறிப் பாக மாணவருக்குக் கட்டாயமாக்கப்பட வேண்டும். உணவுத்தயாரிப்பாளருக்கும் பொது மக்களுக்கும் ஆரோக்கியமான சம விகித உணவு தயாரிப்பது பற்றியும் அதை ஏற்று உண்பதற்கான அவசியத்தையும் தெளி வாக்க வேண்டும். தேநீருக்குப் பதில் பாலும் குருதியில் குளுக்கோஸ் அளவை விரைந்து அதிகரிக்கச் செய்யும் வேக உணவுகளுக் குப் பதில் நார்ப்பொருள் அதிகமுள்ள சிற் றுண்டி மற்றும் உணவுவகைகளையும் பழங் களையும் உணவகங்களில் கிடைக்கச் செய்ய வேண்டும். வேலைத்தளங்களும் பாடசாலைகளும் நேரசூசியை மாற்றி அடிக் கடி உண்பதற்கு ஆவன செய்ய வேண்டும். சூரிய வெளிச்சத்தில் மாலைநேர விளை யாட்டு கட்டாயமாக்கப்பட வேண்டும். உணவுப்பழக்கங்களும் உடற்பயிற்சியும் சிறந்தோங்க வேண்டும்.

**உண்பதற்காக வாழ்வோம்**
**வாழ்வதற்காக உண்போம்.**


★★★★★★★★★★★★★★★★ (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர் மூத்த விநாயகர் ஆலய தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## 28.06.2009



## ஆசிச் செய்தி



தொல்லை வினை தீர்க்கும் நல்லை மூத்தவிநாயகர் சர்வ விக்கின நிவாரகராக சகல காரிய சித்தியராக நல்லூரில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ மூத்த விநாயகப் பெருமானுக்கு அழகிய சிற்பத் தேர் அமைக்கப்பட்டு இன்று தேர்த் திருவிழா நடைபெறும் காட்சி மிகவும் கிடைத்தற்கரியது.

ஆகவே இத் தேர் உற்சவத்தை வருடா வருடம் கண்டுகளிக்கும் அனைத்து அடியார்களுக்கும் சகல செல்வங்களும் கிடைத்து சுபீட்சமாக வாழ எம் பெருமான் அருள்புரிய ஆசி கூறி அமைகின்றேன்.

ஸர்வே ஜெனகா சிகினோ பவந்து

இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோயில்
ஆதீன குருவும் நல்லூர் மூத்த விநாயகர்
தேவஸ்தான மகோற்சவ குருவுமான
சிவாகம கிரியா தத்துவநிதி
இ.பாலச்சந்திரக்குருக்கள்

## தர்மகத்தா சபைத் தலைவரின் செய்தி



நல்லூர் மூத்த விநாயகர் ஆலயத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலிக்கும் விநாயகருக்கு இன்றையதினம் இரதோற்சவம். பிரணவத்தின் வடிவாகவும் பொருளாகவும் அமைந்த திருவுருவமே விநாயகர். விநா யகர் வழிபாடு மிக இலகுவானது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகிய சித்திரத் தேரில் மூன்றாவது வருடம் ஆரோகணித்து திருவீதி உலாவரும் விநாயகரின் திருக்காட்சியைக் காணும் அடியார்கள் இப் பிறவிப் பயனைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் நீடூழி வாழ மூத்த விநாயகனை இறைஞ்சி வணங்கி மகிழ்கின்றேன்.

என்.கண்ணலிங்கம்,
தலைவர்,
நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தானம்.


## தேர் திருவிழா

சிறப்புற வாழ்த்துவோர்

**திருமுருகன் கொம் நெற்**
259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
WESTERN UNION MONEY TRANSFER

**சாமி பல்பொருள் வாணிபம்**
கோயிலுக்குத் தேவையான பூசைமணி, பெரிய மணி, கிடாரம், திருவாசி, குத்துவிளக்கு, ஸ்தூபி கும்பத்துக்குரிய செம்பு வகைகள், எவர்சில்வர், பித்தளை, அலுமினியம் பொருள்கள் முதலியன எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
இல.313, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**வசந்தன்**
வர்த்தக நிலையம்
பல்பொருள் வாணிபம்
274, மூத்த விநாயகர் கோயிலடி, நல்லூர்.

**எஸ்.சண்முகலிங்கம்**
மூத்த விநாயகர் கோயிலடி, நல்லூர்.

உங்களுக்குத் தேவையான அழகுசாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் ஆகியவற்றை பெற்றுக்கொள்ள
**கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்**
**ஜெயலக்ஸ்சன் பான்சி ஹவுஸ்**
இல.162, 207 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 222 7453

கட்டடப் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**ஸ்ரீ சுகந்தி சேல்ஸ் சென்ரர்**
ச.சாந்தலிங்கம்,
383, நாவலர் வீதி. ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.
137, மூத்தவிநாயகர் வீதி. கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்

**அபிராமி அழகு மாடம்**
அழகு சாதனப் பொருள்கள் யாவும் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
27, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.



### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், வயது 32, உயரம் 5'8'', நட்சத்திரம் புனர்பூசம், பாவம் 22, 8 இல் சனி, சூரியன், செவ்வாய், ராகு என்பன 11இல், A/L Maths,open university இல் கட்டடக்கலைஞராகப் படித்து தற்போது France இல் இருக்கும் மண மகனுக்கு Canada or ஐரோப்பா நாடுகளில் PR உள்ள மணமகள் தேவை தொடர்பு:
0773151245, 0777076637.

### திருமண சேவை

மணமக்களே! www.thaalee.com என் கிற Website இல் பல்லாயிரக் கணக்கான மண மக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாதகங்கள், புகைப் படங்கள் உள்ளன. நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். உங் களுடைய விவரங்களையும் நீங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு தொ.பே.: 2523127, 2520619.
Address: 45/1, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு - 15.


## அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மக்கள் வங்கியால் சேமிப்பு

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் சிறுவர்த்தகர்கள், விவசாயிகளுக்கு மக்கள்வங்கி பல நலத்திட்டங்களை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதன் ஆரம்பக் கட்டமாக சிறுசேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்தநலத்திட்டங்களைப் பெற விரும்பும் சிறுவர்த்தகர்கள், விவசாயிகள் அருகில் உள்ள மக்கள் வங்கிக்கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (203- 236)

## நலன்புரி நிலைய மக்களுக்கு பொருள்கள்

அரியாலை சமூக அபிவிருத்திச் சங்கம் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து கைதடி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு ஒரு லட்சத்து 60ஆயிரம்ரூபா பெறுமதியான சமபோஷ, பிஸ்கட், பேபிசோப், குங்குமம், கண்ணாடி, பவுடர் போன்ற பொருள்களை சுமார் 990 பேருக்கு வழங்கியுள்ளதாக அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். பாற்பவுடர், ஜீவாகாரம் ஆகியவற்றையும் வழங்க நடவடிக்கை [illegible] டது. (203 - 111)


### திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

# தேவை

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான வாகன உதிரிப்பாகங்கள் ரயர், பற்றரி ஆகியன விற்பனை செய்வதற்கு வியாபார முகவர்கள் தேவைப்படுகிறார்கள்.

இலங்கையில் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனையில் முன்னோடியாகத் திகழும் டக்ளஸ் அன் சன்ஸ் ஸ்தாபனத்தாரால் இறக்குமதி செய்யப்பட்ட, ஜப்பானிலும், இந்தியாவிலும் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பொருத்தக்கூடிய உதிரிப்பாகங்கள் ரயர் மற்றும் பற்றரி ஆகியவற்றை விற்பனை செய்வதற்கான வியாபார முகவர்கள் தேவைப்படுகின்றார்கள்.

ஆர்வம் உள்ளவர்கள் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து உடனடியாக உங்கள் வியாபார நிலையத்தின் முழு விபரங்களையும் தபால், தொலைநகல் (Fax) அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாக கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

GENERAL MANAGER
**DOUGLAS & SONS (PVT) LTD**
290/25, SRI SANGARAJA MAWATHA, COLOMBO - 10.
TELEPHONE: 0115 608414, 0115 608444
FAX: 0112 541128, 0115 608434
E-MAIL: dsl@douglas.lk

MITSUBOSHI UNION JAPAN. Quantum ANL 555 INCOE GLOBAL RDH ANAND GABRIEL EXEDY YUASA Quantum NPW GT RADIAL


## பொன்விழாக் காணும் அண்ணா தொழிலகம்

அண்ணா தொழிலகம் தான் ஐம்பதாண்டை
நிறைவு செய்து தன்பணிதொடர்கிறது
ஆண்டவனின் அருள் பெற்ற அருளாளர்.
இவர் நற்பணி தொடர்கிறார்.
இணுவில் மட்டுமல்ல இவ்வையகம்
எங்கணும் விரிகிறது இவர் சேவை
ஈழத்து மண்தனிலே! எம் தமிழ்த்தாய்
பெற்றெடுத்த பெருமகனாம் எம்மதிபர்
உண்மைதனை மறந்திடுமோ- எம்
எம் மேன்மக்கள் நெஞ்சங்கள்
ஊக்கமதில் உறுதியாய் உலகெங்கும்
உம் சேவை விளங்கச் செய்தீர்
எங்கள் அண்ணா பெயருக்கேற்ப
இவர் செய் பொருள் முதல் நிலைதான்
ஏழை என்று எவருமிலர் இவர்
செய்தொழில் நிலைதனிலே
ஐயமில்லை. எல்லோரும் வாழ வேண்டுமென
இறைவனடி இறைஞ்சுபவர்
ஒருவருக்கல்ல பலர் வாழ்வில்
பண்பாளர் உதவியவர்
ஓம் என்னும் பொருள் விளங்க
ஓங்காரமாய் விளங்குபவர்
ஔவியம் பேசுவோரை அகம்திருத்தி
அரவணைக்கும் இயல்பாளர் இவர்
என்றென்றும் நீர்வாழி! நின் தொழில் வளம் வாழி!
வாழி!

**அண்ணா விவசாயப் பண்ணை**

முகாமையாளரும், ஊழியர்களும்,
இணுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கானை அரசடி வைரவர் ஆலய தேர்த் திருவிழாச் சிறப்பு மலர்

28.06.2009

## முருகண்டியில் பிள்ளையார் சங்கானையில் அரசடி வைரவர்

ஈழத்தமிழர்களின் காவல் தெய்வம் வைரவர். குடியிருக்கும் வீட்டிற்கு அருகே வைரவர் சூலம் வைத்து தாமே பூசைசெய்து வழிபட்டுவரும் தெய்வமாக வைரவர் கடவுள் இருந்து வருகிறார். வீட்டின் பாதுகாப்பிற்கு நாய் எதற்கு. அதனை வாகனமாகக்கொண்டிருக்கும் வைரவப்பெருமான் குடியமர்ந்திருக்கும்போது என ஈழத்தமிழர்கள்கள் நம்பிக்கையோடு வழிபட்டு வருகிறார்கள்.




அரசடி வைரவர் சக்தி அருளாட்சி தனித்துவமானது. இலங்கையை போர்த்துக்கேயர் கைப்பற்றி காலனித்துவ ஆட்சி நடத்திய பின்னர் ஒல்லாந்தர் ஆட்சிபுரிந்த காலம் சைவர்கள் வெளிப்படையாகத் தம் வழிபாடுகள் நடத்துவதற்கு எதிராக பல தடைகள், தண்டனைகள் வழங்கி இம்சைப்படுத்திய காலம். இவ்விதமான மத மேலாதிக்கம் கொண்டு செயற்பட்ட காலத்தில் பல சைவக் கோயில்கள் இடிக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டன. ஒல்லாந்தர் கவனம் கரையோரப் பகுதிகளில் இருந்து நாட்டின் உட்புறமாக நுழைந்தது. ஏனெனில் கரையோரப் பகுதிகளில் ஏற்கனவே போர்த்துக்கேயர், கத்தோலிக்க மத அறிமுகம் செய்துள்ளார்கள். இந்நிலையில் பொன்னாலை கிருஸ்ணர் கோயில் ஏழு வீதிகள் அமைக்கப்பட்டு இருந்தன. ஏழாவது வீதி மதிலை இடித்துக்கொண்டு வந்து சங்கானையின் கோட்டை ஒன்றைக் கட்டும் பணியில் கடுமையாக உழைத்துக் கட்டி வந்தார்கள்.

இதேவேளை இடித்துக்கொண்டுவரப்பட்ட கற்குவியலுடன் வைரவர் சூலமும் தற்செயலாகக் கொண்டுவரப்பட்டது. அந்தச் சூலம் ஒல்லாந்தர் அதர்மம் கண்டு வெகுண்டது.

ஒல்லாந்தர் கோட்டையைக் கட்டும் பணிகள் ஆரம்பித்து தொடர, கட்டடம் இடிந்து விழுந்த வண்ணம் இருந்தது. ஒல்லாந்து அதிகாரிகளுக்கு அதிர்ச்சியாகவும் புரியாத அனுபவமாகவும் இருந்தது. இக்கால கட்டத்தில் அவர்களுக்கு ஏதோ ஒரு சக்தி தம்மை இப்பணி தொடரவிடாமல் தடுக்கிறது என உணர்ந்து பின்வாங்கினர்.

இவ்விடிந்த கட்டடம் இன்றும் சங்கானையில் பிரதான வீதி அருகே இருக்கின்றது. இந்தக் கட்டடத்தருகே கண்டுபிடிக்கப்பட்ட சூலத்தினை அருகிலுள்ள வானலாவ வளர்ந்திருக்கும் அரச மரத்தடியில் சைவக்குருக்கள் பரம்பரையினர் வழிபட்டு வ்ந்தனர்.



முருகண்டி வீதி வழியாக பிரயாணம் செய்பவர்கள் தம் வாகனங்களை நிறுத்தி பிள்ளையாரை வழிபாடு செய்வதுபோல் காரைநகர், மூளாய், வட்டுக்கோட்டை போன்ற இடங்களில் இருந்து சங்கானைச் சந்தைக்கு வருபவர்களும் சைக்கிள் வாகனங்களில் இருந்து இறங்கி பயபக்தியுடன் வைரவப் பெருமானை வழிபாடு செய்துகொண்டிருந்தார்கள். சங்கானை நாகர் வழிபாடு முதன்மைபட்டு இருந்த காலம். அக்காலத்தில் புத்தமதம் அறிமுகம் ஏற்பட்டது. இன்றைய மாதகல் துறை முகத்தில் யம்புகோல என்னும் துறைமுகம் ஏற்றுமதி, இறக்குமதி மையமாக இருந்தது.

சங்கானை வைரவர் அருளாட்சிகள் பல அவற்றில் ஒரு சில. அந்த ஆலயத்தை விரிவாக்கி நடராஜர் சந்நிதி அமைப்பு சிதம்பர நடராஜர் திருநாள்களில் விசேட பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாலயத்தில் நான் சிறுவனாக இருந்தபோது அசரீத வாக்கு கிட்டியது. அது இன்றும் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் மறை. ஒருநாள் முற்பகல் 10 மணியளவில் ஒரு பெண் வைரவருக்குப் பூசைசெய்ய 5 ரூபாவை தந்து விட்டுச் சந்தையில் பழம் வாங்கிவரச் சென்றார். ஆலயத்திற்கும் சந்தைக்கும் 5 நிமிடம் நடக்கும் தூரம். அவரைப் பல மணித்தியாலங்களாகக் காணவில்லை. என்ன அதிசயம் அவர் அதே 10 மணியளவில் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நிற்பதைக் கண்டு பலரும் வியந்து போனார்கள். அவரை யாரும் அழைத்துச் செல்லவில்லை. இவ்வகை நொந்து பட்ட மக்களுக்கு பேரருள் பாலிக்கும் வைரவப் பெருமானுக்கு இவ்வாலயத்தை அரச மரத்தடியில் சிறிய நிலையில் இருந்து இன்றைய நிலைக்கு கட்டியெழுப்பிய குருநாதர் அமரர் பொ.அப்பாத்துரை ஐயா. மூத்தமகன் இரத்தின சாமிக் குருக்கள் (J.P) அவர்கள் பெரும் முயற்சியும் மக்கள் பேராதரவும் இன்று பெரும் வைரவர் ஆலயமாகக் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றது.

இன்று அப்பெருமானுக்கு நடராசப் பெருமானும் தேரில் காட்சியளித்து மக்களுக்கு அருள் பாலிக்கின்றார்.



பரமனை மதித்திடா பங்கையாசனன்,
ஒருதலை கில்லியே ஒலித்த வானவர்,
குருதியூ மகன்தையும் கொண்டு தண்டமும்,
புரி தரு வடுகளை போற்றி செய்குவாம்

சிவஸ்ரீ சு.இரத்தினசாமிக் குருக்கள்.


**ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்**
இல.10,
பஸ்நிலையம் முன்பாக,
சங்கானை.

கூட்டுறவு நகர் தரமான
பொருள்கள் நியாயவிலையில்
விற்பனை செய்யும் ஸ்தாபனம்.
**Chankanai MPCS Ltd.**
ப.நோ.கூ.சங்கம்
பிரதான வீதி, சங்கானை.

**மெடிலான்ட் மருத்துவமனை**
ஆங்கில மருந்துகள்
விற்பனையில் பலவருட அனுபவம்
உள்ள நிறுவனம்
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
பிரதான வீதி, சங்கானை.

**COMPUTER WORLD**
All Kinds of Computer Works,Computer Classes, Self Practicals, Local, I.D.D, Internet Calls, Internet Browsing
Local: 021 459 1761, 021 459 1890
I.D.D: 0094 21 459 1761,0094 21 459 1890,
Fax :021 459 1761, Emaill: computerworld@wow.lk
No.07, Main Road, Chankanai,

**குமரன்**
சைக்கிள் உதிரிப்பாக
விற்பனையாளர்
தரமான பொருள்கள் நியாய
விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்
பிரதான வீதி, சங்கானை.

**தெய்வேந்திரம்**
(சுப்ரா)
**உணவகம்**
பிரதான வீதி, சங்கானை.

பலசரக்குப்பொருள்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
**A.கந்தசாமி**
பலசரக்கு மாளிகை
பிரதான வீதி, சங்கானை.

**வைத்திலிங்கம் அன் சன்**
பலசரக்குப் பொருள்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.
பிரதான வீதி, சங்கானை.

**அட்ஸ்ஷா உணவகம்**
சைவ, அசைவ உணவு வகைகள்,
சுவையான சிற்றுண்டி வகைகள்
ஓடருக்கு குறித்த நேர காலத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, சங்கானை.

சகல விதமான கையடக்கத்
தொலைபேசி விற்பனையும் திருத்த
வேலைகளும் செய்துகொள்ள
**மொபைல் பிளாஷா**
போன் சொப்
பிரதான வீதி, சங்கானை.

**தரன் றேடஸ்**
கட்டடப்பொருள் விற்பனையாளர்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**பாக்கியரத்தினம்**
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
கட்டடப்பொருள்கள், மின்சார
இணைப்புப்பொருள்கள்
ஏகவிநியோகஸ்தர்:
பிரதான வீதி, சங்கானை.


### வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருடனான சந்திப்பு நாளைமறுதினம் (30.06.2009) செவ்வாய்க்கிழமை பி.ப.12 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் வேலையற்ற பட்டதாரிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
குறிப்பு: Statement போட்டோப் பிரதியை தவறாது கொண்டு வரவும்.

சி.வசீகரன், தலைவர்,
யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்.
(86622) T.P.: 077 8449742

### தேசிய கல்வி நிறுவக 2ஆம் வருட பரீட்சைக்கு தோற்றுவோருக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்28

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா 2ஆம் வருடப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைவரையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை ஒப்படைகள், செயற்றிட்டம், பரீட்சைக் கட்டணம் ஆகியவற்றுடன் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு ஆயத்தமாக வருமாறு சிரேஷ்ட விரிவுரையாளரும் தேசிய கல்வி நிறுவகப் பிராந்திய இணைப்பாளர் திருமதி த.வில்வநாதன் அறிவித்துள்ளார். (50)


**வீடு வளவு விற்பனைக்கு**
7/1, நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் உள்ள சகல வசதிகளும் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. Include Sales Agreement Facilities (K.K.S.Road இல் இருந்து சம்பியன் லேன் ஊடாக வரவும்)
[illegible]

இழந்த சக்தியை மீண்டும்
பெற்றிடப் பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ்
வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்
என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

2ஆம் ஆண்டு நிறைவு
முற்றிலும் இலவசம்...!
Free Service
SCOT கணனி நிறுவனத்தின் 2ஆம் ஆண்டு நிறைவையும்,
SCOT கணனி விற்பனை மற்றும் பழுதுபார்த்தல் நிலையத்தின்
1ஆம் ஆண்டு நிறைவையும் முன்னிட்டு
01/07/2009 தொடக்கம் 20/07/2009 வரை
FREE உங்கள் கணனிகளை இலவசமாக Service செய்தும் FREE
பழுதுபார்த்துக்கொள்ளவும் முடியும்.
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
1- Windows Operating System நிறுவுதல்
2- கணினி வைரஸ்களுக்கான தீர்வு (Software & Updates)
3- நவீன மென்பொருட்கள் நிறுவுதல் (Latest Softwares)
4- கணனிகளின் இயங்கு வேகத்தை அதிகரித்தல்*
5- தேவையற்ற File களை அகற்றுதல் என்பனவும்
முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படும்.
Software CDs, DVD, யாழ்ப்பாண தகவல் களஞ்சியம் தமிழ் இறுவட்டு என்பவற்றை மிகக்குறைந்த விலையிலும், Printing, Scanning, போட்டோ கொப்பி, CD, DVD Writing போன்ற சேவைகளை குறைந்த கட்டணத்திலும் மேற்கொள்ள முடியும் என்பதனை மிகவும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.
SCOT UPGRADE YOUR LIFE
SCOT கணனி நிறுவனம்
கற்குழி 1 ஆம் ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
SCOT கணனி விற்பனை மற்றும் பழுதுபார்த்தல் நிலையம்
கண்டி வீதி, சாவகச்சேரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

70 வருடங்களுக்கும் மேலாக...
எமக்களிக்கும் மதிப்பிற்கு,
எம்மீது வைத்திக்கும் நம்பிக்கைக்கு,
எம்மை வளர்த்தெடுத்த கரங்களுக்கு,
உரம் கொடுத்த தோள்களுக்கு
DIMO வை சேர்ந்த நாம்...
நன்றி கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

நீங்கள் எமக்களித்த பாக்கியமாக,
நவீன தொழில்நுட்பத்தில் உருவான
உலகின் உன்னத தயாரிப்புகளை,
சிறந்த முறையில் நாம் உங்களுக்கு வழங்குகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| BFGoodrich<br>SUV & Off-Road டயர்கள்<br>SUV & Off-Road Tyres | BOSCH<br>Invented for life<br>பவர் டூல்/இயந்திர உதிரிகள்<br>Power Tools & Automotive Parts | CHRYSLER<br>INSPIRATION COMES STANDARD<br>பயணிகள் கார்கள்<br>Passenger Cars | CLAAS<br>உழவுயந்திரங்கள்<br>Combine Harvesters |
| DETROIT DIESEL CORPORATION<br>டீசல் எஞ்ஜின்கள்<br>Diesel Engines | Dräger medical<br>மருத்துவ உபகரணங்கள்<br>Medical Equipment | fischer<br>கட்டுமான தீர்வுகள்<br>Fixing Solutions | Mahindra TRACTORS<br>ட்ரக்டர்கள்<br>Tractors |
| Mercedes-Benz<br>பயணிகள் கார் மற்றும் ட்ரக்<br>Passenger Cars & Trucks | MRF<br>ட்ரக் மற்றும் பஸ் டயர்கள்<br>Truck & Bus Tyres | mtu<br>பவர் சிஸ்டம்ஸ்<br>Power Systems | OSRAM<br>பல்ப் தெரிவுகள்<br>Lighting Solutions |
| SSI SCHAEFER<br>களஞ்சியப்படுத்தல் வசதிகள்<br>Storage Solutions | SIEMENS<br>கட்டிட இயக்க நுட்பங்கள்/ சக்தி பொறியியல்/ மருத்துவ உபகரணங்கள்<br>Building Technologies, Power Engineering & Medical Equipment | TATA<br>லொறி/ட்ரக்/பஸ்/கார்<br>Commercial & Passenger Vehicles | ZEISS<br>மருத்துவ உபகரணங்கள்<br>Medical Equipment |

70 dimo TECHNOLOGY 1939-2009

**Diesel & Motor Engineering PLC.**
65, ஜேதவன வீதி, கொழும்பு 14.
தொலைபேசி: 011 2449797.
உடனடி தொடர்புகளுக்கு: 0773 442 165
www.dimolanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SINGER டபள் வாசி




முதலாவது சலுகை

பழைய TV ஐக் கொடுத்து அதிகூடிய கழிவினை பெற்றுக்கொள்ளுங்கள்.

இரண்டாவது சலுகை

புத்தம் புதிய Singer Platinum TV ஒன்றை 4 வருட உத்தரவாதத்துடன் எடுத்துச் செல்லுங்கள்.

மாதாந்தம் ரூ. 2,861/- மட்டுமே.

விரையுங்கள்!

இல. 1G, ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் எமது யாழ்ப்பாணக் கிளை அமைந்துள்ளதால், அங்கிருக்கும் எமது வாடிக்கையாளர்களும் இச்சலுகையை பெற்றுக்கொள்ள முடியும்.

(011) 5 400 400 www.singersl.com

SINGER Mega SINGER Plus SISIL WORLD

PLATINUM
The world's first flat panel-style TV



TATA



வருமானம் தரும் அட்சய பாத்திரம்

• ஆகக்குறைந்த டயர் தேய்மானம்* • நிகரற்ற சிறந்த சிக்கன எரிபொருள் பாவனை* • நவீன தொழில்நுட்பத்துடனான கமின்ஸ் (CUMMINS) என்ஜின்
• ஆகக்குறைந்தது 25 டொன்கள் வரையில் சரக்கு ஏற்றக்கூடியது • சிக்கன விலை

TATA விடமிருந்து இப்பொழுது, புதிய லொறிகள் மற்றும் ட்ரக் வண்டித்தெரிவுகள். அட்சய இலாபம் பெருக்கிடும் TATA, உங்கள் வாழ்விலும் சௌபாக்யம் பெருக்கட்டும். இந்தியாவின் வர்த்தக வாகன தயாரிப்புகளில் முதலிடம் பெறும் TATA வை உங்களுக்கு கொண்டு தரும் DIMO, கடந்த 70 வருடங்களுக்கும் மேலாக தன்மீது மதிப்பும் நம்பிக்கையும் கொண்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு வர்த்தக துறையினர்க்கு நன்றி கூறிக்கொள்வதுடன், தனது அர்ப்பணிப்பு மிகுந்த சேவையை தொடர்வதில் திடசங்கட்பம் பூண்டுள்ளது.

• 24 மணிநேர வழித்துணையுடன், விற்பனைக்கு பிந்திய விரிவான சேவை.

*பரிசோதிக்கப்பட்ட நிலையில்

70

Diesel & Motor Engineering PLC.
65, ஜேதவன வீதி, கொழும்பு 14.
தொலைபேசி: 011 2449797

உடனடி தொடர்புகளுக்கு : அசோக்குமார் 0773 184586, நவாஸ் 0777 747616


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்வத்துரை
செல்வநாயகம் ஜே.பி.யூ.எம்.
(உயர்நீதிமன்ற சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)
(காரைநகர்)

அன்னை மடியில் 03.07.1940
ஆண்டவன் அடியில் 28.06.2006

திதி: 25.06.2009

வளமுடன் வாழ்வாங்கு வாழ்ந்து
எம்மை வழி நடத்திய நீங்கள்
அன்று பிறருக்குக் காட்டிய
அன்பும் ஆதரவும்
இன்று எமைக்காத்து
வழி நடத்துகின்றன
தங்களைப் பிரிந்து
ஆண்டுகள் மூன்று ஆகியும்
ஆறுமோ எம் மனம்
என்றும் உங்கள் நினைவாகவே....

உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**மனைவி, சகோதரர்கள்**
மற்றும் **குடும்பத்தினர்.**

87/1, 2/1, மாருதி கோட்,
ஹம்டன் லேன், கொழும்பு-06,
தொ.பே.: 2366379.

(ச/559220)

# உரப்பையில் இருந்து சிசு மீட்கப்பட்டது

கோப்பாய் மத்தியிலுள்ள வீடொன்றிலிருந்து உரப்பையில் கட்டப்பட்ட நிலையில் சிசு ஒன்று மீட்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் பிறந்ததாகக் கருதப்படும் இக்குழந்தை இறந்த நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டது. இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் குழந்தையின் தாய் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் குழந்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் பி.ப. 5 மணியளவில் கோப்பாய் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (1-5-78)

# முன்பள்ளி மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் போட்டி

முன்பள்ளி மாணவர்களுக்கான மாதாந்த கல்வி ஊக்குவிப்பு போட்டித் தொடரில் ஜூன் மாதத்திற்கான போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கிட்ஸ் பார்க் முன்பள்ளியில் பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி வீரமங்கை யோகரட்ணத்தின் நெறிப்படுத்தலில் போட்டி இடம்பெறவுள்ளது. (203-250)


## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் (விதானையார் வீதி) 1½ பரப்புக் காணியில் மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 5787.

(ச/559202)

## மணப்பெண் தேவை

Jaffna Hindu கௌரவ குலம், 34 வயது, பூராட நட்சத்திரம், MPA Qualified, Audit Assistant ஆக இருக்கும், Australia Citizen மணமகனுக்கு மணப்பெண் தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை. மூன்று சுற்றுக் கிரகபாவம். Profile Number 5864. இது ஒரு திருமண சேவை (www.thaalee.com) போன்: 2520619

## மணமகன் தேவை

Jaffna Hindu கௌரவ குலம், 41 வயது, கார்த்திகை நட்சத்திரம், MBA Qualified, UK Citizen, Divorced பெண்ணிற்கு மணமகன் தேவை. 1இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக்கிரக பாவம் 60, Profile Number 5677
இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
போன்: 2520619

## மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ குலம், 32 வயது, மிருகசீரிடம் நட்சத்திரம், Technician ஆக இருக்கும் Canada Citizen மணமகனுக்கு மணப்பெண் தேவை. 12இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக் கிரகபாவம் 7. Profile Number 6037
இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
போன்: 2520619

## மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ குலம், 32 வயது, மூல நட்சத்திரம், Network Engineer, UK Citizaen மணமகனுக்கு மணப்பெண் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை. மூன்று சுற்றுக்கிரகபாவம் 24. Profile Number 6224
இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
போன்: 2520619


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் யோகசிங்கம்
சத்தியேந்திரா
(B.Sc.Hons) Q.S. A.C.E. (U.K) (Cost Eng)



தோற்றம் 11.11.1969
மறைவு 28.06.2007

எமது அன்புச் செல்வமே!

அன்பிற்கு இலக்கணமாய்
அறிவிற்குப் பெட்டகமாய்
பண்பிற்குப் பிறப்பிடமாய்
பார்ப்போரை எண்ணவைத்தாய்

அன்னை உன் நினைவால் என்றும்
அடைந்திடும் பரிதவிப்பை
எண்ணி நாம் எந்த நாளும்
ஏங்கிட வைத்தே சென்றாய்......

குடும்பத்தினர்.

"சீதேவி",
அச்சுவேலி வடக்கு.
அச்சுவேலி.

(86611)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 . 04 . 1943
உதிர்வு 08 . 07 . 2008



அமரர் கதிரவேலு அப்பாத்துரை (அப்பான்னை)
[முன்னாள் இ.போ.ச. மின்சாரப் பகுதி, இரத்தினம் லைட், விநாயகா வொறி உரிமையாளர்]

திதி: பூர்வபசஷ்டி ஷஷ்டி

அன்பின் உறைவிடமாய் ஆற்றலின் வெளிப்பாடாய்
என்றும் குன்றாத எழிலின் சிகரமாய்
பண்பின் ஊற்றாய் பிறர்போற்றும் உத்தமனாய்
மின்னும் புன்சிரிப்போடு மிடுக்காய் இருந்தவரே!
ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை உம் நினைவு
நித்தம் அருகிலிருக்கும் நின்மனையாள் அன்புக்காய்
காத்திருக்கும் பிள்ளைகள், உடன்பிறப்புக்கள்
முத்தம்பெறத் துடிக்கும் பேரப்பிள்ளைகள்
என்றும் சுத்திவரும் எக்னோபவர் மோட்டார் வண்டி
என்ன முறுக்கென்று ஓடும் லொறியொன்று
எல்லாம் இங்கிருக்க நீர் மட்டும் எங்கு சென்றீர்?
எம் அஞ்சலிப் பூக்களால் உம்மை ஆராதிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"ஈஸ்வரி பவனம்",
பிள்ளையார் கோவிலடி, கோப்பாய்.

குடும்பத்தினர்.

(86550)

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி நடேசமூர்த்தி

(இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர், அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு, தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக்வும் கொண்ட சின்னத்தம்பி நடேசமூர்த்தி (இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர் -அச்சுவேலி) 25.06.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் லோகநாதன்- நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிறீமதியின் (சித்திரா) பாசமிகு கணவரும் பிருந்தா (சுவிஸ்), பிரசாந்(சுவிஸ்), பிரதீபா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஞானசுந்தரமூர்த்தி, சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), திவாகரமூர்த்தி, பாஸ்கரமூர்த்தி (பிரான்ஸ்), லோகநாயகி (திருகோணமலை), பத்மநாயகி, வசந்த நாயகி (வவுனியா), சாந்த நாயகி, ஜெயநாயகி (கொழும்பு), கிருஷ்ணநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திர குமார் (சுவிஸ்), பிரசன்னா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் குமாரசுவாமி தனபால சிவரஞ்சிதன், காந்தன், பார்த்தீபன் (சவுதிஅரேபியா), விஜயகுமார் (மலேசியா), ஸ்ரீபதி ஐயர், இராசம்மா, தவநேசமணி, குமுதினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று , பூதவுடல் அச்சுவேலி, தோப்பு இந்து மயானத்தில் நண்பகல்12 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி- ந.சிறீமதி(சித்திரா)
பிள்ளைகள்.

ஆஸ்பத்திரி வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

(சி/559239)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய



# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர்



28.06.2009



## அருள்மிகு திருநெல்வேலி முத்துமாரியம்மன் தேவஸ்தானப் பாமாலை



இலங்கு நல் திருநெல்வேலியூராம் பதிதனிலே
துலங்கு நல் அருளொடு அன்னையாம் முத்துமாரி
வேப்பமரத்தடியின் வேப்பிலைக் காரியம்மா!
செப்பிடத்தான் முடியுமோ? நின் ஆலயத்தின் பெருமைதனை
கொத்துக் கொத்தாய்க் கொண்டல் அங்கே
பூத்துக் குலுங்கிடவே
புத்தினிலே நல்ல பாம்பு படமெடுத்து ஆடிடவே
கத்தும் கடலோரம் காத்திருக்கா நயினை (ஆச்சி) -யுண்டு
எண்ணிய கருமங்கள் எளிதினில் ஈடேற
வன்னி மரத்தின் கீழே வந்தமர்ந்த தெய்வமுண்டு
மாரியம்மன் கோயில் முன்னால் தாமரைத் தடாகம் உண்டு
தாமரைத் தடாகத்திலே தளிர்நடை ஆம்பலுண்டு
அண்ணனவன் ஆனைமுகன் அமரும் ஆலமரமுமுண்டு
ஆனந்தக் கூத்தனவன் ஆலயமும் அருகேயுண்டு
இத்தனைக்கும் மத்தியிலே நீண்ட நெடுஞ்சாலையுமுண்டு
சாலையின் இருமருங்கும்-நெட்ட
நெடுங் கோபுரங்களுண்டு
அங்கே அப்பனின் அருளாட்சி
இங்கே அம்மையின் அருளாட்சி
அருளாட்சி வேண்டி நின்றோம்
இருளாட்சி வேண்டாமம்மா!
முத்துநகை புரிபவளே முத்துமாரியம்மா
அன்னமிடுபவளே ஆதரிப்பாய் தாயே
கன்னமிடுபவரைக் களைந்தெறிவாய் நீயே
சித்திரத் தேரினிலே சிங்காரமாய் வருபவளே
பத்திரமாய் நாம் வாழ பக்குவம் சொல்வாயம்மா!

அம்பிகை அடியான்



## பிரதம குருவின் ஆசிச்செய்தி

ஈழமணித்திருநாட்டின் வரலாற்றுச் சிறப்பும் தொன்றுதொட்டு மரபுப்பெருமையும் ஒருங்கே பெற்றுள்ள திருத்தலங்களில் திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானமும் ஒன்றாகும்.

வேண்டுவதை வாரி வழங்கிக் கொண்டிருக்கும் எல்லாம்வல்ல ஸ்ரீமுத்துமாரியம்மாளின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை 28.06.2009 காலை 8 மணிக்கு நடைபெற அம்பாள் அருள்பாலித்துள்ளாள்.

இப்பொன்நாளிலே பங்கு கொண்டிருக்கும் அனைத்து அடியார்கள் அனைவருக்கும் அம்பாளின் கிருபா கடாட்ஷம் கிடைக்க வேண்டும் என ஆசீர்வதிக்கிறேன்.

சிவஸ்ரீ கிருபாகரக் குருக்கள் (வரதன் ஐயா)
ஆலய பிரதம குரு.



## மகோற்சவ குருவின் ஆசியுரை

ஈழமணித் திருநாட்டின் வரலாற்றுச் சிறப்பும் தொன்றுதொட்டு மரபுப் பெருமையும் ஒருங்கே பெற்றுள்ள திருத்தலங்களில் திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானமும் ஒன்றாகும். இவ்வாலயம் தொன்றுதொட்டே நித்திய, நைமித்திய பூசைகள், வழிபாடுகள், கிரியைகள், அபிஷேகங்கள், மகோற்சவங்கள் போன்றவற்றை குறைவின்றி நிறைவேற்றிய பெருமையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாண்டின் இரதோற்சவ தினமான இன்று 2009 ஆம் ஆண்டு விரோதி வருடம் ஆனித் திங்கள் 14 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (28.06.20009) காலை 8 மணிக்கு அம்பாள் சித்திரத் தேரில் பவனி வருவாள். அவ்வேளை அனைத்து அடியார்களுக்கும் அம்பாளின் கிருபா கடாட்ஷம் கிடைக்க வேண்டுமென ஆசி கூறுகிறோம்.

சிவஸ்ரீ சி.இராசேந்திர குருக்கள், மகோற்சவகுருவும், பிரதமகுருவும்.


தேரேறி வரும் ஸ்ரீமுத்துமாரி அம்பாள்
வினை அறுத்து அருட்கடாட்ஷம் தந்திடுவாள்

**தேர்த் திருவிழா**
சிறப்புற வாழ்த்துவோர்

தேரேறி வரும் ஸ்ரீமுத்துமாரி அம்பாள்
அடியவர்க்கு குறை தீர்த்திடுவாள்

**ஜெயதேவா**
எரிபொருள் விற்பனை நிலையம்
பரமேஸ்வராச் சந்தி,
பலாலி றோட், யாழ்ப்பாணம்.

**கூட்டுறவு நகர்**
யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்
கூட்டுறவு நகர் I கூட்டுறவு நகர் II
ஆகியவற்றின் விற்பனைப் பகுதிகளுடன்
புடவை வியாபாரத்திற்கான ஒரு தனிப் பகுதியையும்
ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத் தருகிறோம்.
எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
இங்கிலாந்து, ஜப்பான் இத்தாலி போன்ற நாடுகளில்
இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட
*Trouser Materials*, இந்தியாவில் இருந்து
தருவிக்கப்பட்ட *Khushboo* சல்வார் வகைகள் மிகக்
குறைந்த விலைகளில்.......
இப்பொழுதே விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.
குறிப்பு: மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புவோர்
யாழ். மாவட்ட நகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின்
சமாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.த)

சுத்தமாகவும் சுகாதாரமாகவும்
தரமான உணவு வகைகள்,
சிற்றுண்டி வகைகள்
கிடைக்கும் இடம்
**கண்ணன் லொஜ்**
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

**தேனு களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
நியாய விலைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்.
இல.29 , சந்தை உட்புறம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**சிவன் கிறீம் ஹவுஸ்**
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

**சுதர்சன் மருந்தகம்**
Medicals & Groceries
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

**கஜன் குறூப்**
பத்திரிகை விற்பனையகம்
காகிதாதிகள், புதினப்
பத்திரிகைகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
76 B, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

**தேவி களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம்
மொத்தமாகவும்
சில்லறையாகவும் நியாய
விலைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்.
இல.43, சந்தை உட்புறம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**சிவன் ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம்
புதினப் பத்திரிகை முகவர்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.

**சென்றல் நேசிங் கோம்**
**CENTRAL NURSING HOME**
*PVT Ltd.*
350, Palaly Road, Jaffna
T.P. 021 222 2263

**கண்ணன் சூஸ்**
*KANNAN SHOES*
பல்வகை டிசைன் வகைகள்,
பாதணிகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.
பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.

**கரன்**
புடவை அகம்
பலாலி றோட்,
திருநெல்வேலி.

**அன்னக்கிளி**
பல்பொருள் அழகு மாடம்
205, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

**மா.நடராசா அன்கோ**
*M.Nadarasa & co*
**Hardware Stores**
*30/1, Palaly Road*
*Thirunelvely Junction,*
*T.P: 2223436*

**ஆஷா பான்சி**
*ASHA FANCY*
சகல விதமான அழகு சாதனப்
பொருள்களையும்
பெற்றுக் கொள்ளலாம்.
பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்துறவி...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் அவளிடம் உனக்கு உண்மை அன்பு இல்லாதபோதும் அன்புள்ளவன் போல் நடித்து உன்னை நீயே ஏமாற்று கிறாய்; இல்லையா?''

காகம் தலையை மெல்லத் திருப் பியது.

''அதிருக்கட்டும் துறவியாரே; இந்த அருமையான இளம் வயதில் எல்லோரும் இன்பத்தை அனுபவிக்கத் தாங்கள் மட் டும் துறவியாய் இருக்கக் காரணம் யாதோ?''

''குழந்தாய்! எல்லோரும் இன்ப மென்று கருதுவதை ஒருவன் துன்ப மென்று கருதி வெறுக்கிறான் என்றால், அவன் மற்றவர்களிலும் பார்க்க கூடு தலாகச் சிந்திக்கிறான் என்பது தானே பொருள். உண்மையை உணர்ந்த எவனும் துறவையே நாடுவான். உண்மையை அறிந்தபடியால்தான் நான் துறவியானேன்''.

''துறவியாரே முற்காலத்துத் துறவிகள் மனித சஞ்சாரமற்ற கானகங்களிலேதான் தவஞ் செய்தார்களென அறிந்திருக்கிறோம். தாங்கள் மட்டும் ஆண்களும் பெண்களும் நிறைந்த இவ்விடத்தில் தவம் செய்கின்றீர்களே!''

''முன்பிருந்த துறவிகள் நாட்டில் வசித்தால் மக்கள் தம் தவத்தைக் குலைத்துவிடுவரென அஞ்சிக் காடு களிற் கரந்துறைந்தனர். ஆனால், நானோ முற்றுந் துறந்தவன். எந்தச் சூழ்நிலையிலும் உண்மைத்துறவுடன் என்னால் வாழமுடியும். எங்கேயும் எவராலும் என்தவத்தைக் குலைக்க முடியாது என்ற உறுதி பூண்டவன். அதனால் தான் பருவ உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் இச்சூழ்நிலையை என் துறவுக்குப் பரிசோதனைக் களமாக்கிக் கொண்டு இங்கே தவம் செய்கிறேன்''.

''அது சரி துறவியாரே, துறவிகள் தமக்கு மட்டும் பயன்தரக்கூடிய முறையிற்றானே உலகில் வாழ்கிறார் கள்''.

''தவறு மகனே! நான் இவ்விடத்தில் வீற்றிருப்பதற்குப் பொதுநல நோக்கமும் ஒரு காரணமாகும்''.

''அப்படி என்ன பொதுநலத்தைச் செய்கிறீர்கள்?''.

''இங்கு வாழ்பவர்களெல்லோரும் இன்பமாக வாழ்கிறார்கள் என்று நினைக்கிறாயா? தவறு மகனே. இன்பமும் துன்பமும் தொடர்ந்து வருபவை. இங்குள்ள அத்தனைபேரின் சொந்த விடயமும் எனக்குத் தெரியும். இவர்கள் தினமும் வந்து தங்கள் எண்ணங்கள், விருப்புகளை எனக்குக் கூறுகிறார்கள். வேற்றூர்களில் உள்ள அவர்களின் உறவினர், நண்பர்கட்குச் செய்தி சொல்வதன் மூலம் இவர்களின் ஆவல்களைப் பூர்த்தி செய்கின்றேன்''.

''ஆச்சரியமாய் இருக்கிறதே'' காகம் வியந்தது.

''அதோ என்னிடம் ஆண்களும் பெண்களும் வருகிறார்கள். எட்ட இருந்து பார்''.

பல ஆண்களும் பெண்களும் வந்து துறவியாரிடம் எதையோ கொடுத்து விட்டுச் சென்றனர்.

''பார்த்தாயா மகனே?'' துறவி கேட் டார்.

''அவர்கள் தங்களிடம் எதையோ கொடுத்துவிட்டுச் சென்றார்களே, அதென்ன துறவியாரே?''

''மகனே! பொதுநல நோக்கங் கொண்டாலும் நான் துறவி''.

''அவர்களின் செய்திகளை எப்படி வேற்றூர்களில் உள்ளவர்களுக்குத் தெரிவிக்கிறீர்கள்? உங்களுக்கு அட்டமா சித்திகள் தெரியுமா? அல்லது விண்ணவரை ஏவல் கொள்கிறீர்களா?''.

''அப்படி ஒன்றும் இல்லை. எனக்கு ஒரு சீடன் இருக்கிறான், அவனே செய்திகளைக் கொண்டு செல்வான். அதோ அவனே வந்துவிட்டானே''.

யாரோ ஒருவன் மிதிவண்டியில் வந்து துறவியாருக்கு அண்மையில் இறங்கினான். துறவியாரைக் குனிந்து வணங்கியபடியே செய்திகளையும் பெற்றுக்கொண்டு திரும்பிச் சென்றான்.

காகம் ஆச்சரியமடைந்தது.

''என்னுடைய சீடனைப் பார்த்தாயா?''. உங்கள் பொதுத்தொண்டு போற்றற் குரியது துறவியாரே''.

அப்பெரழுது ஓர் இளம்பெண், துறவி யாரிடம் செய்திகொண்ட உறையைக் கொடுத்துவிட்டுச் சென்றாள்.

''துறவியாரே! எனக்குகொரு சந் தேகம். பண்டைத் துறவிகளும் ஏன் பட்டினத்தாரும் கூட பெண்களை இகழ்ந்து பாடியுள்ளார்களே. தாங்கள் மட்டும் அப்படி வெறுக்காமல் அவர் களுக்குத் துணை புரிகின்றீர்களே.

''அந்தத் துறவிகள் பெண்களை ஏன் இகழ்ந்தார்கள் தெரியுமா? அவர்கள் புலன் ஒடுக்கத்தை விரும்பினார்கள். ஆனால் பெண்ணாசையோ அவர்களின் மனவொடுக்கத்தையும் திமிறி எழுந்தது. ஒரு புறம் துறவையும், மறுபுறம் பெண் களையும் அவாவிய அவர்கள் மனம் இரண்டிற்கும் இடையே ஊசலாடவே, பெண்களை மறப்பதற்காக பெண் களைப் பேய்கள் என்றும், பிசாசுகள் என்றும் பலவாறாக இழித்துக் கூறி வெறுப்பை ஏற்படுத்தி தம் மனதை அடக்க முயன்றனர். இதுதான் அவர்கள் பெண்களை இகழ்ந்தமைக்கும் காடுகளில் தவம் செய்தமைக்கும் காரணமாகும். ஆனால் பெண்களோ தாய்க்குலத்தினர். பெண்மை என்னும் பெருமை வாய்ந்தவர்கள். ஆமாம், ஒவ்வொரு பெண்ணையும் ஒவ்வொரு சக்தி வடிவாகவே நான் காண்கிறேன்''.

பெண்களை உயர்த்திப் பேசியது காகத்திற்குப் பிடிக்கவில்லையோ என்னவோ!! வேறு திசையில் கவனத் தைச் செலுத்தியது.

''அதோ! பாருங்கள் உங்களைப் போல் உடை அணிந்துகொண்டு மூவர் செல்கிறார்களே. அவர்களும் உங்களைப் போல் துறவிகள்தானா''.

காகம் காட்டிய திசையில் துறவி பார்த்தார். அங்கே மூன்று பௌத்த பிக்குகள் சிரித்துக் கதைத்தபடி சென்ற னர். துறவியின் இதயத்திலிருந்து நீண்ட பெருமூச்சு ஒன்று வெளிவந்தது. அமைதியாகக் கூறினார்.

''அவர்களும் துறவிகள் என்றுதான் சொல்லிக் கொள்கிறார்கள். அதில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பது அவர்களுக்குத்தான் தெரியும். ஆனால்....''

துறவி சிறிது நேரம் மௌனமாய் இருந்த பின் தொடர்ந்தார்.

''உலகில் மற்றவர்களைக் குறைகூறு வதற்காக நான் பிறக்கவில்லை அப் பனே!'' சற்று நேரம் இருவருக்கிடையே யும் மௌனம் நிலவியது. சுற்றவர பேச் சொலியும் சிரிப்பொலியும் அவர்களின் அமைதியைக் குலைத்தது.

எறும்புகள் சாரி சாரியாகச் செல்வது போல் மாணவர்கள்தான் வந்து கொண் டிருந்தார்கள். எத்தனை ஆண்கள்! எத்தனை பெண்கள்! எத்தனை காதல் சோடிகள் எங்கும் பேச்சொலி! எங்கும் நகைப்பொலி!

துறவியார் சலனமற்றிருந்தார்.

காதல் சோடிகளைப் பார்த்த காகத் துக்கோ காதல் வேதனை தந்தது.

இதயம் நெருப்பாய் வெந்து கொண் டிருந்தது. அதற்கு தன் காதலி மேல் ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

அந்நேரம், ஒரு பெண் காகம் வருவதைக் கண்டதும் அதற்கு உற்சாகம் பிறந்தது.

''துறவியாரே நான் தங்களிடமிருந்து விடைபெற விரும்புகிறேன்''.

''உன் காதலி வந்துவிட்டாளா?''

''இல்லை வேறொரு பெண் வந்துள் ளாள்''.

துறவியார் சிறிதே நகைத்தார்.

''முன்பு உன் காதலியைக் குறை கூறினாயே, இப்பொழுது வேறொரு பெண்ணுடன் நீ இன்பங்காண விழையலாமா?''

காகத்துக்கோ அந்தப் பெண் போய்விடுவாளோ என்ற அவசரம்.

''ஆறறிவு படைத்த மனிதர்களே நெறிகெட்டுப் பண்பற்று அலையும் போது நான் மட்டும் சுதந்திரமாக இன் பங்காண நினைப்பது தவறா?'' கூறிக் கொண்டே பறந்து சென்றது காகம்.

வதனமெங்கும் புன்னகை சுடர்விட எவ்வித உணர்வுமின்றிக் கண்களை மூடினார் துறவி.

அவர் வேறுயாருமில்லை. அங்கிருந்த தபாற் பெட்டிதான்.

*****

*நன்றி:- 'நிஜத்தின் நிழல்' - சிறுகதைத் தொகுதி.*

## சொற்சிலம்பம் - போட்டி இல:67

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | 9 | | | 10 | | |
| 11 | 12 | | | ■ | 13 | | |
| ■ | 14 | | ■ | 15 | | | ■ |
| 16 | | ■ | 17 | | | ■ | 18 |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### மேலிருந்து கீழ்

1. சேற்றுத் தன்மை.
2. சத்தம் எழுப்புவது/ நேர அளவீடும் கூட.
3. பருப்பு வகைகளுள் ஒன்று.
4. கயிறு.
5. எனவும்/ எந்த நாளும்.
8. முன்றில்.
9. பாரமானது.
10. தேவாரம்/ பாட்டு.
12. தினசரி மாறுவது.
15. உணர்ச்சி மண்டலத்துடன் தொடர்புடையது. உணர்வை மூளைக்குக் கடத்துவது.
16. முட்டாள்.
17. இறப்பு.
18. அதிகரிக்கும்/ சேரும்.
19. மருத்துவப் பணிப்பெண்.
20. புதிய.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 67**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 08.07.2009ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல. 67 இல் வெற்றிபெறுவோர் களது விவரம் 12.07.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

### இடமிருந்து வலம்

1. சமமாகப் பேணப்படும் நிலைமை.
6. சீலை.
7. ஒரு திசையின் குறுகிய சொல்.
8. பின் அல்ல.
9. கை பிடி.
11. புதிய தகவல்/ செய்தி.
13. சிறந்தது.
14. வேகம்.
15. உகிர்/விரல்களில் வளர் வது.
16. சந்திரன்/ அறிவு.
17. பிழிவு/ பொழிவு.
19. பாயும்.
20. மத்தி.
21. இரத்தம்.
22. கண்ணுக்கு மேல் நெற்றிப் பகுதி

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ,மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 65 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)தேசவழமை (5)அது (7)கதிரை (8)தாபகன் (10)புவனம் (12)பிதா (14)சம்பவம் (16)யாசகம் (18)ரதி (19)சன்னி (20)நாம் (22)தகழி (23)சளி (24)கோல் (25)கைம்மாறு

**மேலிருந்து கீழ்**
(1)தேகப்பியாசம் (2)சதி (3)வரைபு (4)மைதானம் (5)அக (6)துன்பம் (9)பம்பரம் (11)வசம் (13)தாசன் (15)வதி (17)கனிதல் (20)நாழிகை (2)களிறு (23)சமா

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனை களும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம்போட்டி இலக்கம்: 65 இற்கான சரியானவிடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**க.குகானந்தன்,**
*வேலாயுதம் பிள்ளை வீதி, துணாவில் மத்தி, சாவகச்சேரி.*

**2 ஆம் பரிசு**
**அ.அருளரசன்,**
*இல:758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

**3 ஆம் பரிசு**
**லோ.பத்மரூபன்,**
*மாதர்சங்க வீதி, சித்தங்கேணி, வட்டுக்கோட்டை.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

(1) **செல்வி ஜானகி தர்மலிங்கம்,**
'அருணோதயம்', நாவலடி, புலோலி மத்தி, பருத்தித்துறை.

(2) **ப.மகேந்திரதாசன்,**
'வசந்தம்', சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.

(3) **திருமதி ச.லிங்கமூர்த்தி,**
அமெரிக்கன் மிசன் பாடசாலை ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

(4) **திருமதி அ.ஹரீஸ்கந்தராஜா,**
இல:15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.


(5) **மூ.வித்தியாதரன்,**
மடத்தடி, பலாலி வீதி, உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY

UNIVERSITY OF WESTMINSTER

# A UK DEGREE IN JAFFNA !




University of Westminster located in Central London is one of the leading Universities that was awarded "The Queen's Award for Enterprise".

Informatics Institute of Technology, Colombo in Collaboration with University of Westminster offers;

- **BEng (Hons) Software Engineering**
- **BSc. (Hons) Information Systems with Business Management**

*Opportunities*

- Degree programme to be conducted in Jaffna
- Ability to Transfer to UK
- You will be placed in a Prestigious Organisation in Colombo for Industrial Training during the 3rd Year
- Identical Certificate awarded by the Vice Chancellor of University of Westminster

*Why IIT ?*

- Informatics Institute of Technology has been a pioneer in conducting internal British Degrees in Sri Lanka since 1990
- Has produced over 1,800 graduates in the fields of Business and IT who hold prestigious positions Locally and Internationally

Informatics
Building Better Solutions Through Integration

Contact :
Prof. R. Sivachandran
Consultant Programme Coordinator
Tel: 021 222 3274, 021 222 9861, 0777266075 E-mail: avsrsiva@gmail.com

An Investment In Life

தகவல் தொழில் நுட்ப நிறுவனம் IIT

வெஸ்ற் மின்ஸ்ரர் பல்கலைக்கழகம்

# ஐக்கிய இராச்சியப் பட்டம் யாழ்ப்பாணத்தில்!




**வெஸ்ற் மின்ஸ்ரர் பல்கலைக்கழகம்**
மத்திய லண்டனில் அமைந்துள்ளது.
உயர்தரம் மிக்க இப் பல்கலைக் கழகம் தகவல் தொழில் நுட்பத்துக்கான "இராணிப் பட்டம்" வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள சிறப்பு உடையது.

கொழும்பு தகவல் தொழில் நுட்ப நிறுவனம் வெஸ்ற் மின்ஸ்ரர் பல்கலைக் கழகத்துடன் இணைந்து பின்வரும் பட்டங்களை வழங்குகின்றது.

* சிறப்பு பொறியியல்மாணிப் பட்டம் (மென்னியல் பொறியியல்)
* சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டம் (தகவல் தொழில் நுட்ப முறைகளும் வணிக முகாமைத்துவமும்.)

விசேட அனுகூலங்கள்

* பட்டப் படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்துதல்.
* பட்டப் படிப்பை லண்டனுக்கு மாற்றித் தொடர்வதற்கான ஏற்பாடு.
* 3 வது வருடத்தில் கொழும்பில் உள்ள உயர்தர நிறுவனமொன்றில் பயிற்சி பெறும் வாய்ப்பு.
* வெஸ்ற் மின்ஸ்ரர் பல்கலைக்கழக துணைவேந்தரினால் வழங்கப்படும் ஒரேதரப் பட்டச் சான்றிதழ்.

IIT ல் எதற்காக இணைதல் வேண்டும்?

* 1990 ம் ஆண்டு முதல் இலங்கையில் ஐக்கிய இராச்சியப் பட்டங்களை உள்வாரியாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதான முன்னோடி நிறுவனமாகத் திகழ்தல்.
* உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் தரமிக்க நிறுவனங்களில் பணியாற்றும் 1800 க்கு மேற்பட்ட வணிகத்துறை, கணணித் தொழில் நுட்பப் பட்டதாரிகளை உருவாக்கியமை.

Informatics
Building Better Solutions Through Integration

தொடர்புகளுக்கு:
பேராசிரியர். இரா. சிவசந்திரன்
[illegible]
தொலைபேசி இல: 021222-3274, 021-2229861 கைத்தொலைபேசி இல: 0777266075
மின்னஞ்சல்: avsrsiva@gmail.com

An Investment In Life


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் மார்க்கண்டு
பொன்னுப்பிள்ளை

வையகத்தில்
09.07.1927

வானகத்தில்
09.07.2008

திதி: ஷஷ்டி

ஆண்டு ஒன்று கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீ சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமா எம் துயரம்!

கைதடி மேற்கு,
கைதடி.

உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

(86630)

## கண்ணீர் அஞ்சலி



செல்வி கந்தசாமி
மகாலட்சுமி

அன்பிற்கும் பண்பிற்கும்
இருப்பிடமாய் இருந்தாய்
ஆதரவு மொழிபேசி
இன்முகம் காட்டினாய்
இன்று உந்தன்
[illegible] கேட்டு மனம்
[illegible]னை அடைகின்றோம்.
நீ மறைந்து போனாலும்
உந்தன் சிரித்த முகமும்
அன்பு வார்த்தைகளும்
கண்முன்னே சாட்சியாகி
எதிரொலித்து எம் நெஞ்சை பிழிகிறது

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருற்றிருக்கும்:
முகாமையாளர், ஊழியர்கள்,
எரிக்கனோஸ் குடும்பத்தினர்.

(86638)

## அறிவித்தல்

முன்னர் நாவலர் றோட்டில் இயங்கிய அருச்சுவை புத்தகசாலை தற்போது நல்லூர் முருகன் புத்தகசாலை என்ற பெயரில் 20A (54), செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றது. எம்மிடம் நாவல், சமயம், சரித்திரம், சினிமா தொடர்கதை, காமிக்ஸ், வைத்தியம், புதிய, பழைய புத்தகங்கள் வாடகைக்கும், விற்பனைக்கும் மொத்தமாகவும், சில்லறையாகவும் உண்டு.

*(தினக்குரல் விடுதி முன்பாக)*

## விற்பனைக்கு

கடைப் பாவனைக்குரிய மரத்தாலான show case விற்பனைக்கு உண்டு.

தொ.பே.: 060 2216802,
077 8448961

# கூட்டணியின் தேர்தல் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 28

தமிழர் விடுதலை கூட்டணியினரின் யாழ்.மாநகரசபைத் தேர்தல் விஞ்ஞாபனக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கட்சியின் ஸ்ரான்லி வீதி தலைமைப் பணி மனையில் இடம்பெறும்.

தமிழர் விடுதலை கூட்டணியின் சிரேஷ்ட தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக முக்கிய விடயங்கள் வெளியிடப்படும்.

இக் கூட்டத்தில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்.

கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கட்சி செயலாளர் இரா. சங்கையா கேட்டுள்ளார்.

## கண்ணீர் அஞ்சலி



சின்னத்தம்பி நடேசமூர்த்தி

எமது கிளையின் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமை புரிந்து கொண்டிருந்த சி.நடேசமூர்த்தி கடந்த 25.06.2009 அன்று திடீர் மறைவு அடைந்த செய்தி எம்மை எல்லாம் ஆழ்ந்த அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களின் துன்பத்தில் நாமும் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி,
அச்சுவேலி.

முகாமையாளரும்,
ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் சென்.மைக்கேல் ஆலய முன்னாள் பங்குத்தந்தை
அருட்பணி செ.செபநேசரத்தினம்
அடிகளாரின் அன்புச் சகோதரி


### சின்னராசா மேரிறோஸ்

(பல்லவராயன்கட்டு, குமுழமுனை)

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா நித்திய இளைப்பாற்றிற்காக செபித்து நிற்கின்றோம்.

(சி/559242)

உரும்பிராய் பங்கு நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஊடக அனுசரணை **உதயன்**

யாழ் குடாநாட்டிலுள்ள சகல வலயக்கல்வித் திணைக்களங்களினது ஒத்துழைப்புடனும், வழிகாட்டலுடனும், விசேட கவனிப்பிற்குரிய பாதிக்கப்பட்ட சிறார்கள் உட்பட, யாழ் குடாநாட்டில் உள்ள சகல (5+ to 15) வயது, மழலைச் செல்வங்களின்

EUROPEAN UNION

## சித்திரம்(ஓவியம்), கைவேலை கண்காட்சி - 2009

2009 ம் ஆண்டு சர்வதேச சிறுவர் தினத்தை கொண்டாடும் முகமாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் GODS OWN CHILDREN FOUNDATION (அறக்கொடை நிதியம்) நடாத்தும், யாழ்குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளில் கல்வி கற்கும் பாதிக்கப்பட்ட சிறார்கள் உட்பட சகல மாணவர்களின் சித்திரம், கைவேலை செயற்பாடுகளின் கண்காட்சி நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| இடம் | : யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். |
| திகதி | : யூலை 6ம், 7ம் திகதி 2009 |
| நேரம் | : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை |

நீங்களும் இக்கண்காட்சியில் கலந்து கொண்டு யாழ் மழலைச் செல்வங்களை ஊக்குவித்து கண்காட்சியை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அனுமதி இலவசம்**

**GOC : 140, Temple Road, Jaffna. Tel : 021 222 5796**

விளம்பர அனுசரணை **திருமுருகன் கொம்நெற்**

கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்


## அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள லொறிச் சாரதி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் 20/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வி, பிறப்பு, அனுபவ, வாகன சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றின் பிரதிகள் இணைத்து *பொதுமுகாமையாளர், அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி* என்னும் முகவரிக்கு 14.07.2009 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.


| | |
|---|---|
| பதவி | : லொறிச்சாரதி (குறியீட்டு இல. 312/13 |
| சம்பள அளவுத்திட்டம் : (66/2006 இன் படி) | 9950 - 11700<br>85 X 10 - 90 X 10 |
| கல்வித் தகைமைகள் | : 5ஆம் வகுப்புச் சித்தியுடன் கனரக வாகன ஓட்டுநர்க்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் வாகனம் செலுத்துவதில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம். |
| வயது | : 18 - 45 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். |
| குறிப்பு: | 1. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.<br>2. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.<br>3. இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படுமிடத்து சங்கம் கோரும் பிணைப்பணத்தை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும். |

**பொதுமுகாமையாளர்,**
அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்.

(சி/559237)


## உறுதியும் நம்பிக்கையும் பெற்ற

விவசாய மற்றும் மரவேலை உபகரணங்கள்



வியாபார தொடர்புகளுக்கு:

**KAMSON HARDWARE**

Direct Importers 235, Old Moor Street, Colombo - 12 Tel: 2435413, 2332834, 2337353


## 21 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

## இராசரத்தினம் தவமணி



தோற்றம் 07.12.1939 மறைவு 08.06.2009

கடந்த 08.06.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி இராசரத்தினம் தவமணி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு நடைபெறும். கிரியைகளைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிளாக் வீதி, சங்கானை. **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி தியாகராசா வள்ளிநாயகிதேவி



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா வள்ளிநாயகி தேவி 24.06.2009 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயசிங்கம் மற்றும் சின்னத்தங்கம் தம்பதியினரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், தியாகராசாவின் அன்பு மனைவியும், யாழினி (யாழ்ப்பாணக் கல்லூரி, G.A.Q.2009 மாணவி), கபில்ராஜ் (மாணவன் - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயகுலசிங்கம், சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), சிவகுமார் (தெல்லிப்பழை, துர்க்கையம்மன் தேவஸ்தானம்), காலஞ்சென்ற சிவ பாஸ்கரன் மற்றும் சிவலோகநாயகிதேவி (கனடா), சிவ சண்முகநாதன் ஆகியோரின் சகோதரியும், ரஞ்சிதமலர், அமிர்தாம்பிகை (ஜேர்மனி), ஜெயராணி (தாதியர், யாழ்.போதனா வைத்தியசாலை), ஜெகநாதன் (கனடா), லிங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.06.2009 வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மேற்கு இந்து மயானத் தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தம்மளை,*
*அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.*

தகவல்:
குடும்பத்தினர்


## ஐங்கரன் திருமண சேவை

*யாழ்.இந்து கௌரவ குடும்பம்* U.K. Citizen 24 B.S.c., 28 B.Com, 29 B.S.c., 31 BSc 34 *வயது ஜேர்மன்* Citizen *31 வயது* M.Sc *ஆகிய மணமகன்மார் உள்ளனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு* பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.
*லண்டன்தொடர்பு: 00447535384166, 0447508295863*
Fax: *00442086810701, 0442086720673.*

## விற்பனைக்கு

J.W.XXXX என்னும் இலக்கமுடைய TVS CENTRA மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.60, கண்டிவீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். தொ.பே. 077 6917030, 021 222 3898

## VAN விற்பனைக்கு

Toyota Town Ace வெள்ளை, டீசல் (CR-41) 1997 மொடல். எதிர்பார்க்கும் விலை 16 லட்சம்
தொடர்பு: 077 2508452

## விற்றுத் தீர்த்தல்

1.TECHNICS-12+12 BAND ஈகுவலைசர் (MADE IN JAPAN)
2.PIONEER-கசெற் டெக் (MADE IN JAPAN)
3.SHARP றேடியோ டபுள் கசெற்+மெலோடிக்கா பிளேயர் (MADE IN JAPAN)
தொடர்பு: 060 221 4095


## தவறிவிட்டது

சுணபாலன் தவறாஜமலர் என்பவரது கடவுச்சீட்டு(N 1758442) பிறவுண் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொடர்பு: இல.178, பிறவுண்றோட், யாழ்ப்பாணம்
021 222 2116


## இறைச்சிக் கோழி விற்பனை

நிறை கூடிய தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக் குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**செம்மணி பாம்**
77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு, முருகன் கோயில் வீதியிலுள்ள வீட்டுடன் கூடிய 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
**க.சுரேந்திரன்**
077 6910559, 077 8715649

## சொகுசு வான் சேவை

கொடிகாமத்திலிருந்து கைதடி, கோப்பாய் வீதியூடாக கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடாக பல்கலைக்கழகம்வரை காலை 7.30 மணிக்குச் சென்று மாலை 4 மணிக்குத் திரும்பிவரக் கூடியவாறு Hiace வான் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
077 5578244


## கண்ணீர் அஞ்சலி

### அழகரத்தினம் ஜெயரட்ணம்



எமது பாலர் பாடசாலையில் ஆசிரியராக் கடமை புரியும் செல்வி ஜெயசுதா அவர்களின் அன்புத் தந்தை அழகரத்தினம் ஜெயரட்ணம் 25.06.2009 வியாழக்கிழமை அகால மரணமான செய்தி அறிந்து, ஆழ்ந்த துயரத்துடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

கணேசா சனசமூக நிலைய முன்பள்ளி நிர்வாகத்தினர், முன்பள்ளி ஆசிரியர், முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினர்.

## 61 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27 ★ 09 ★ 1945



மறைவு 29 ★ 05 ★ 2009

### திருமதி பொன்னுத்துரை வரலட்சுமி

இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
இறவா அன்பே
இன்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்கிறோம்
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்வோம்...

*'துவாரகை',*
*உசன், மிருசுவில்.* (86501)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### சுவாமிநாதர் அப்புத்துரை

*(ஒப்பந்தகாரர்)*



புத்தூர் கிழக்கு, வீரவாணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதர் அப்புத்துரை (27.06.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதர் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் யோகராஜாவின் (பாதுகாப்புத் திணைக்களம், யாழ்.பல்கலைக் கழகம்) பாசமிகு தந்தையும் சுபேதினியின் மாமனும் துஷிந்தன், தீபிகா, மகிந்தன், கனிஸ்ரா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா, செல்வரட் ணம், கனகம்மா ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதரவத்தை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரவாணி,*
*புத்தூர் கிழக்கு, புத்தூர்.*
*தொ.பே: 077 1769424*
*077 4949938* (86638)

தகவல்:
**அ.யோகராஜா (மகன்),**
[பாதுகாப்புத் திணைக்களம்,
யாழ்.பல்கலைக்கழகம்]

### கனகசபை நமசிவாயம்

***( ஓய்வுபெற்ற D.O.A, நீர்ப்பாசனத் திணைக்களம்)***

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை 28 2/2, முதலாம் சப்பர் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை நமசிவாயம் 24.06.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்புச் சகோதரனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கிரிதரன் (நீர்ப்பாசனத் திணைக்களம்), சபேதரன், தயாளினி, லதாயினி, ஜெகதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தி, குமுதினி, பிரதாபன், சபேசன், திருமால் ஆகியோரின் பிரியமிகு மாமனும் காருணியா, செஞ்சுதன், கிசிசாந்தி, பிரவீனான், பிருந்தனன், விதுலன், பதுமிதா, மைசா ஆகியோரின் அருமைப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் காலிவீதி, 59ஆம் இலக்கத்திலுள்ள மஹிந்த மலர்ச்சாலையில் இன்று (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/37, பண்டாரக்குளம் மேற்கு,
நல்லூர். (86630)

தகவல்:
**பெறாமக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி ஆலயம்
## தொண்டைமானாறு

சகஸ்ட (1008) மகாசங்காபிஷேகமும் ஆனி உத்தர திருவிழாவும்

நிகழும் விரோதி வருஷம் ஆனி 15ஆம் நாள் (29.06.2009) திங்கட்கிழமை

| | | |
|---|---|---|
| சங்குப் பூசை காலை | | 7.00 மணிக்கும் |
| சங்காபிஷேகம் | - | 10.00 மணிக்கும் |
| சண்முக அர்ச்சனை | - | 11.30 மணிக்கும் |
| அதனைத் தொடர்ந்து | - | 12.00 மணியளவில் |

முருகப்பெருமான் விசேட மங்கள வாத்தியத்துடன் வீதியுலா வந்தருள்வார்.

அன்றையதினம் ஆலய மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

உபயம்:
பொ.சிவஞானம் குடும்பத்தினர்
சங்கத்தானை, சாவகச்சேரி.

ஆலய உரிமையாளர்
அரியரத்தின ஐயர் லோகேஸ்வர ஐயர்

(சி/559247)



A LIFE - TIME CHANCE
# STUDY MEDICINE







MBBS / MD Degrees - 

## பெலாரஸ்
(கிழக்கு ஐரோப்பா)
**MD**
மருத்துவ கலாநிதி
VITEBSK STATE MEDICAL UNIVERSITY
6 year (English Medium)
Course Fees: USD 3800 Per year

## நேபாளம்
**MBBS**
Bachelor of Medicine / Bachelor of Surgery
Offered by KATHMANDU UNIVERSITY
4 1/2 yr + 1 yr Internship (English Medium)
Approx. Rs 780,000 per semester (for 8 Semester)

## லித்துனியா
(Schengen & E.U.)
**MD**
Doctor of Medicine
KAUNAS UNIVERSITY OF MEDICINE
6 year (English Medium)
Course Fees: 5500Euro per year

அனுமதிக்கான தொடர்பு:
Dr. தாரகன் பக்தசீலன் (077-3017883)

PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Overseas Student Placement Department
111-1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06.
Tel : 2586418
www.patheacademy.org



# சிற்றி பாம் ரேடேர்ஸ்
(கோழித்தீவன விநியோகஸ்தர்)
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
கோல்ட் கொயின் கம்பனியின் அதிகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர்



எம்மிடம் சர்வதேச தரச்சான்றிதழ் பெற்ற கோல்ட் கொயின் கோழித்தீவனங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
மொத்தமாக பெற்றுக் கொள்பவர்களுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.
தொ.பே:-0602219063,0777238573,0776184573
கொழும்பு:-0779182724

கிடைக்குமிடங்கள்:
- மகமாயி ஸ்ரோஸ், 866 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
- கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம், கோண்டாவில்.
- ஸ்ரீ கிருஷ்ணா ஸ்ரோஸ், பருத்தித்துறை வீதி, புலோலி.
- A.S.S. பாம், இணுவில்.

# CITY FARM TRADERS
Adiyapatham Road, Kalviyankadu, Jaffna.
Authorized Dealers in Jaffna
For
Gold Coin Feed Mills (Lanka) Ltd. Colombo-Sri Lanka
We Are
Retail & Wholesale Dealer In Poultry Product
Those Interested May Contact Us
In Jaffna:-0602219063,0777238573,0776184573
Colombo:-0779182724

Sales Outlets
- Magamaaji Stores, 866,k.k.s Road, Jaffna.
- Lifco, Kondavil, Nallur.
- Sri Kirishna Stores, Poinpedro Road, Puloly.
- A.S.S Farm, Inuvil.

GOLD COIN POULTRY FEED
CFT
SLSI ISO 22000 FOOD SAFETY MANAGEMENT SYSTEM CERTIFIED
GOLD COIN FEED
GROW WITH GOLD COIN


## நெஞ்சை விட்டகலாத 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 01.12.1964
விண்ணில் 15.05.2009

### இராசு துரைராசசிங்கம்
(மோகன்)

உடன் பிறந்த சகோதரனே
உத்தமனே மோகனே!
நிஜத்தில் நீ நீங்கிப் போனாலும்
நினைவில் வாழ்கின்றாய்
எம்முடன் எந்நாளும்!!

9, பழம் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
T.P. 6565

பிரிவால் துயருறும்:
சகோதரங்கள்.

## குளிரூட்டிய வான் வாடகைக்கு

குளிரூட்டிய வான் வாடகைக் குண்டு. திருமண மற்றும் சுற்றுலா தேவைகளுக்கு உடன் தொடர்பு கொள்ளவும். சண்டெல் தொலைபேசியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
தொ.பே.இல.0773564245

## அதிபர்களுக்கு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 28

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட சங்கம் நடத்தி வரும் 15 வயதுப் பிரிவினருக்கான சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறும். ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

- சென்.ஜேம்ஸ் எதிர் அச்செழு சைவப் பிரகாச வித்தி.
- யாழ்.இந்து எதிர் இடைக்காடு ம.வி.
- அச்செழு சைவப்பிரகாச வித்தி. எதிர் யாழ். இந்து.
- சென்.ஜேம்ஸ் எதிர் இடைக்காடு ம.வி. (1)


# கூல் எயார்
## (KOOL AIR LTD)

எமது ஸ்தாபனத்தின் பொது முகாமையாளர் வியாபார விஸ்த்தரிப்பு சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஆடி மாதம் 1 ஆம் 2 ஆம் திகதிகளில் சமுகம் அளிக்கவுள்ளார்.

⇔ Generator
⇔ Cold Room
⇔ Ice Plant
⇔ Air Conditioner / Certral AC
⇔ Super Market Equipment
⇔ Lift

இவை தொடர்பான விபரம் பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் பின்வரும் முகவரியில் சந்திக்கமுடியும்.

Tilko Holiday's (pvt) ltd.
(Jaffna City Hotar Near
Jeneral Post Office)
70/6, k.k.s. Road, Jaffna. T.P-0772001285, 2225575

C.MATHIAPARANAM,
General Manager
Kool Air ltd.


## மரண அறிவித்தல்

### K.A.J.ஸ்ரீஜெயப்பிரியன் (பாபு)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வளவவத்தயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் K.A.J.ஸ்ரீ ஜெயப்பிரியன் (26.06.2009) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற K.A.J. ஜெயசிங்க (ஆசிரியர்), திருமதி திருவெங்கடவல்லி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வளவவத்த, வியாங்கொடையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

317/24, சேர்விஸ் நிலைய ஒழுங்கை,
சேர் பொ.இராமநாதன் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
இ.ஸ்ரீரங்கநாதன்.

(86645)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 02.02.1947
மறைவு 29.05.2009



## பேராசிரியர் சோமசுந்தரம் கிருஷ்ணராஜா
(கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)

29.05.2009 அன்று சிவப்பேறு பெற்ற எமது குடும்பத் தலைவரின் முப்பத்தோராவது நாளான இன்று அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மச்சான்,
குடும்பத்தவர்.

383/1, கோயில் வீதி,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழ் எம்.பிக்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு அனுமதிக்குக!

இப்பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டிய விடயம் ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இப்போது நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எம்.பிக்களாகச் சுதந்திரமாகச் செயற்படும் உரிமை வழங்கப்பட வேண்டும். இல்லையேல் தமிழ் மக்கள் இந்த நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கை இழந்து விடுவர். நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கையற்ற இன்னொரு புதிய குழு உருவாகிவிடும்'' - இப்படி புத்திமதி கூறியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

அவரும் அங்கம் வகித்த அரசு ஒன்று இந்த விடயத்தில் இழைத்த பாரிய தவறினால் ஏற்பட்டபட்டறிவு அவருக்கு உண்டு. அதன் அடிப்படையிலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டிருக்கலாம் என நம்பலாம்.

1977 ஜூலைப் பொதுத் தேர்தலில் தமிழர் தாயகப் பகுதி எங்கும் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்து அக்கட்சியைப் பெருவாரி வாக்கு வித்தியாசங்களோடு நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தனர். இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சி என்ற அந்தஸ்தையும் பிரதான எதிர்க்கட்சி என்ற நிலையையும் பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாகத் தமிழ்க்கட்சி ஒன்றின் வசமாயிற்று. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலை வரானார்.

நாடாளுமன்றத்தில் தமிழருக்குக் கிட்டிய அந்த முன்னிலைமை, அந்த மன்றம் ஊடாகத் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற சிறிது நம்பிக்கையை அப்போது தமிழர்களுக்குத் தந்தது என்பது உண்மைதான்.

ஆனால் காலக்கிரமத்தில் அந்த நம்பிக்கை பொய்த்துப் போயிற்று; பிழைத்துப் போயிற்று. அதன் பின்னர் நடந்தேறிய சம்பவங்கள் எல்லாம் நாடாளுமன்ற அரசியலில் முழு நம்பிக்கை வைத்துச் செயலாற்றிய தமிழ் தரப்புக்களை அந்தச் சூழலில் இருந்து அந்நியப்படுத்துவனவாகவே அமைந்தன.

தென்னிலங்கையில் அப்பாவித் தமிழர்கள் மீது மிக மோசமான வன்முறைப்புயல் 1983 ஜூலைக் கலவரமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டது. வரலாற்றில் முன்னெப்போதுமில்லாத கொடூரங்களையும், துன்ப துயரங்களையும், பேரழிவுகளையும் ஈழத் தமிழர்கள் சந்தித்தனர்.

அந்தப் பின்னணியிலேயே அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசினால் அரசமைப்புக்கான ஆறாவது திருத்தம் விழுந்தடித்துக் கொண்டு வரப்பட்டது. அதன் விளைவாக நாடாளுமன்றில் அங்கம் வகித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் எம்.பிக்கள் அனைவரும் - 17 பேரும்- தமது பதவிகளைத் துறந்து வெளியேற வேண்டியவர்களானார்கள்.

ஒருபுறம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிக மோசமான இனக்கலவரம். மறுபுறம் தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திலிருந்து சமயோசிதமாக வெளியேற்றும் தென்னிலங்கையின் வியூகம் இந்த இரண்டும் சேர, நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கையிழந்து பிற வழிகளில் தமக்குத் தீர்வைத் தேடும் ஒரு தீவிரவாத இளம் சமூகம் தமிழர் மத்தியில் விஸ்வரூபம் எடுத்தது. ஆயுத வழிப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்த பல் வேறு அமைப்புகளும் தமிழர் மத்தியில் பிறப்பாக்கம் பெற்று ஸ்திரம் பெற்றது. இந்தப் புறச்சூழலில் தான் என்பது அப்போதைய அரசில் அங்கம் வகித்த தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருக்கு நன்கு தெரியும்.

அதனால்தான் தமிழர் தரப்பின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் சுயாதீன செயற்பாட்டுக்குக் கட்டுப்பாடு விதித்துத் தடை ஏற்படுத்தக் கூடாது என்று ஆலோசனையை அரசுத் தரப்புக்கு அவர் இப்போது முன்வைக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடு திரும்ப முடியாமல் வெளி நாட்டில் தங்கியபடி தமது அரசியல் எதிர்காலம் குறித்துச் சிந்திக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். அதேசமயம் நாட்டில் உள்ள பல தமிழ் எம்.பிக்கள் தத்தமது சொந்த இடங்களுக்கு - தாங்கள் பிரதிநிதித் துவம் செய்யும் மாவட்டங்களுக்கு - சென்று தமது மக் களைச் சந்திக்க முடியாதவர்களாக நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றார்கள்.

இவர்கள் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய வாய்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுவது அவசியம். அப்படிச் செய்தால் நாடாளுமன்றின் மீது தமிழர்களுக்கு நம்பிக்கை பிறக்கும். அதன் மூலம் தங்களுக்கு நீதி, நியாயம் கிடைக்க இன்னும் வாய்ப் புண்டு என்ற தெம்பு அவர்களுக்கு சற்றேனும் ஏற்படும்.

# நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள சிறுவர்கள் போசாக்கின்மையால் கடுமையாகப் பாதிப்புற்றுள்ளனர்

## அரசு கூடிய கவனம் செலுத்தக் கோருகிறார் ராதிகா குமாரசுவாமி

ஜெனிவா,ஜூன் 28

இடம்பெயர்ந்தோர் நலன்புரிமுகாம் சிறுவர்களது போசாக்கின்மை நிலை குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகளின் சிறுவர் மற்றும் ஆயுதப் போராட்டங்களுக்கான விஷேட பிரதிநிதி ராதிகா குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியுள்ளசிறுவர்களது போசாக்கு நிலைமை குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் உள்ள சிறுவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் அமைப்பு விசேட குழுவொன்றை விரைவில் அனுப்பி வைக்கத் திட்டமிட்டுள்ளது.

சிறுவர்களுக்கு மத்தியில் குறை போசாக்கு நிலை மிகவும் அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட சிறுவர்களை வழி நடத்துவது குறித்தும் ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கை அரசாங்கத்திற்கு அறிவுரைகளை வழங்க உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

முகாம்களில் பெற்றோர்களை பிரிந்து வாழும் சிறுவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும், சிறுவர்களை மீளவும் பெற்றோர்களுடன் இணைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் ராதிகா குமாரசுவாமி கோரிக்கை விடுத்துள்ளார். (50)

# தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்யுமாறு இலங்கை அரசிடம் கனடா உறுதி மொழி பெற வேண்டும்

## அந்நாட்டு அங்கிலிக்கன் பேராயர் பிரதமருக்குக் கடிதம்

மொன்றியல், ஜூன் 28

இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள், பாதுகாப்பு, நல்வாழ்க்கை ஆகியவற்றை உறுதி செய்யுமாறு இலங்கை அரசிடம் கனடா உறுதி மொழிகளைப் பெறவேண்டும்.

இவ்வாறு கனடா நாட்டு அங்கிலிக்கன் பேராயர் பிராட் கில்ட்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாகக் கனடா நாட்டு அங்கிலிக்கன் தேவாலயப் பேராயர் பிராட் கில்ட்ஸ் கனேடிய பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட படைநடவடிக்கையில் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்கு தேவையான அனைத்துலகத்தின் உதவிகளைக் கனடா முன்னெடுக்க வேண்டும்.

வன்னி மக்கள் அடிப்படை வசதிகள் இன்றியும், பாதுகாப்பு இன்றியும் வாழ்கின்றனர். அண்மையில் அவர்கள் மோதல்களில் அகப்பட்டு மிகப்பெரும் நெருக்கடிகளைச் சந்தித்திருந்தனர்.

கனடாவின் மிகப்பெரும் நகரத்தில் 2 லட்சம் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் கடந்த சில மாதங்களாகப் பேரணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் நடைபெற்ற போரை நிறுத்துமாறு கனடா அரசிற்கு அவர்கள் அழுத்தங்களை ஏற்படுத்தி வந்திருந்தனர்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள், பாதுகாப்பு, நல்வாழ்க்கை ஆகியவற்றை உறுதி செய்யுமாறு சிறிலங்கா அரசிடம் கனடா உறுதிமொழிகளைப் பெறவேண்டும்.

இலங்கையில் உள்ள தமிழ் மற்றும் சிங்கள மக்களிடம் உள்ள இன மோதல்களுக்கான காரணிகளை நீக்குவதற்கு அனைத்துலகத்தின் ஆதரவுகளைக் கொண்ட செயற்பாடுகளைக் கனடா தலைமை தாங்கி மேற்கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

# நாடறிந்த மூத்த தமிழ்க் கவிஞர் முருகையன் நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம், ஜூன்28

ஈழத்தின் தமிழ் இலக்கியத்துறையில் நாடறிந்த மூத்த கவிஞரும் நாடக எழுத்துருப் படைப்பாளியுமான கலாநிதி இ.முருகையன் தனது 74 ஆவது வயதில் நேற்று 27 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

1935 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் பிறந்த இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். விஞ்ஞானமாணிப் பட்டதாரியான இவர் ஆசிரியர், அரசகரும மொழித் திணைக்கள மொழி பெயர்பாளர், ஆசிரிய கலாசாலை விரவுரையாளர், கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளர் மற்றும் யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் ஆகிய அரச பதவிகளை வகித்து ஓய்வுபெற்றவர்.யாழ்.பல்கலைக்கழகம் இவருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. திருமணத்தின் பின்னர் நீர்வேலியில் வசித்துவந்த இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

மாணவனாக இருந்த காலம் முதல் தமிழ் நாடகத்துறையில் ஈடுபாடு காட்டிச் செயற்பட்டு வந்த இவர், ஒரு தலை சிறந்த கவிஞராகவும் தம்மை நிலை நிறுத்திக் கொண்டவர்.

24 நாடகங்களையும் ஏராளமான கவிதைகளையும் எழுதியுள்ள இவரது நாடகம் மற்றும் கவிதைகளில் சமூகத்து மனிதர்களது வாழ்க்கை அனுபவங்களே உள்ளடக்கமாக அமைந்துள்ளன.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறை வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாக இலங்கை அரசு 2006 ஆம் ஆண்டுக்கான 'சாகித்யரத்னா' விருது வழக்கிக் கௌரவித்தது.

# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் முதலாவது குருபூசை நிகழ்வு வெள்ளியன்று

யாழ்ப்பாணம், ஜூன்28

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் முதலாவது குருபூசை நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், நினைவுரையை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் நிகழ்த்துவார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சிறப்பு மலர், திரு ஞான சம்பந்த சுவாமிகள் அருளிய திருமுறை ஆகிய நூல்கள் இந்த நிகழ்வில் வெளியிடப்படவுள்ளன.

சிறப்பு மலரின் வெளியீட்டுரையை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளர் கந்தையா நீலகண்டனும், திருமுறை வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக பதில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. சிவலிங்கராஜாவும் நிகழ்த்துவார்கள். (50 - 204)

## தேர்த்திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 28

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலய சிவன்வாயில் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று காலை இடம் பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9 மணிக்கு சிவன் தேரில் ஆரோகணித்து அருள் பாலிப்பார். (1)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்28

கொக்குவில் மாத்தனை கந்த சுவாமி கோயில் பெருந்திருவிழா வில் இன்று முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழா இடம்பெறும்.

நாளை காலை தீர்த்தத் திருவிழா நடைபெறும். (1)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 15 | 29.06.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | மு.ப. 11.13 வரை |
| நட்சத்திரம்: | உத்தரம் |
| | பி.ப. 03.43 வரை |
| சுபநேரம்: | 11.56 - 01.26 |
| ராகுகாலம்: | 07.26 - 08.56 |

## விக்ரோறியா மகாராணியின் நிறைவு விழா

**ஜூன் 28 1887**

விக்ரோறியா மகாராணியின் நிறைவு விழா (Jubilee) 1887 ஆம் ஆண்டு ஜூன் 28ஆம், 29ஆம் திகதிகளில் இலங்கை முழுவதிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் விக்ரோறியா மகாராணியின் யூபிலி கொண்டாட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன.

இருபத்தெட்டாம் திகதி காலை இங்கிலாந்து திருச்சபை தேவாலயத்தில் (யாழ்ப்பாணத்தில்) விசேட பிரார்த்தனை இடம் பெற்றது. காலை பதினொரு மணிக்கு வறிய மக்களுக்கு இலவசமாக அரிசியும் பாலும் வழங்கப்பட்டன. இரவு முற்றவெளியில் 'வர்த்தக நாடகம்' எனும் நாடகம் நடைபெற்றது. இருபத்தொன்பதாம் திகதி விக்ரோறியா மகாராணி நினைவாக யாழ்ப்பாண வைத்தியசாலையில் விடுதியொன்றுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இரவு அரிச்சந்திர விலாசம் எனும் நாடகம் மேடையேற்றப்பட்டது. இரு நாள்களும் உள்ளூர் கலைஞர்களின் இசைக் கச்சேரியும் வாண வேடிக்கைகளும் இடம் பெற்றன.

இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!

அழிந்து போன எமது பாரம்பரிய விளையாட்டுகளில் வாண வேடிக்கையும் ஒன்று. ************************

தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்

# வாகரையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த புலி உறுப்பினர்கள் மூவர் நீதிமன்றில் ஆஜர்

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பொலிஸ் நிலையத்தில் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் கடந்த ஒரு மாத காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் மூவரும் நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்றுமுன்தினம் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நடைபெறவிருக்கும் அடையாள அணி வகுப்பில் இவர்கள் ஆஜர் படுத்தப்படவேண்டியிருப்பதால் திரையிடப்பட்ட வாகனமொன்றில் நீதிமன்றத்திற்குப் பொலிஸாரால் அழைத்துவரப்பட்டு, நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, சமர்ப்பித்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா எதிர்வரும் 24ஆம் திகதிவரை தொடர்ந்தும் தடுத்து வைக்க உத்தரவிட்டுள்ளார்.

முள்ளிவெட்டுவானைச் சேர்ந்த ராகுலன் எனப்படும் செல்லப்பா சிவானந்தன், வாகனேரியைச் சேர்ந்த கரன் எனப்படும் பரமக்குட்டி சாமுவேல், கொண்டையன் கேணியைச் சேர்ந்த புகழேந்தி எனப்படும் கணபதிப்பிள்ளை அமரசிங்கம் ஆகிய விடுதலைப்புலி உறுப்பினர்களான இம்மூவரும் கடந்த மே மாதம் 28ஆம் திகதி வாகரைப் பிரதேச இராணுவக் கட்டளைத் தளபதியூடாக பொலிஸில் சரணடைந்திருந்தனர்.

அவசரகால சட்ட விதிகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இம்மூவர் தொடர்பாக பொலிஸார் நீதிமன்றத்தில் ஏற்கனவே ஆஜர்படுத்தாமல் இரு தடவைகள் அறிக்கைகள் சமர்ப்பித்த போது ஆஜர்படுத்த வேண்டுமென நீதிபதியினால் உத்தரவு பிறப்பக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அடையாள அணிவகுப்புகளிலும் நிறுத்தவேண்டியிருப்பதால் தொடர்ந்தும் ஒருமாத காலம் தடுத்து வைக்க நீதிமன்றத்தின் அனுமதியைப் பொலிஸார் கோரினர். இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி எதிர்வரும் 24ஆம் திகதி வரை தொடர்ந்தும் தடுத்துவைக்க அனுமதி வழங்கினார். (அ-சி)

## கருணா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

540 பேர் இராணுவத்தில் இணைய விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 140 பேர் ஏற்கனவே இராணுவத்தில் இணைக்கப்பட்டு விட்டனர்.

எஞ்சியுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் படையினரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன என்று கருணா தெரிவித்துள்ளார்.

அதேவேளை -

தமது அணியில் 100பேர் இராணு வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்துள் ளனர். இதுவரை 40 பேர் இராணுவத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் எஸ்.சந்திரகாந்தன் கூறியிருக்கிறார். (1)

## போரினால் அழிவடைந்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சி அளிக்கவும் இந்த ஒப்பந்தம் உதவும் எனத் தெரிவிக் கப்பட்டது.

250 கிலோ மீற்றர் தண்டவாளப் பாதையை மீள அமைப்பதற்கும் 600 பயணிகள் பயணம் செய்யக்கூடிய ரயில் திருத்த வேலை ஆகியவற்றுக்கு பாகிஸ்தான் உதவும் என அந்தச் சபையின் நிர்வாக இயக்குநர் மொஹமட் ரசீட் தெரிவித்தார்.

அத்துடன் பொருள் ஏற்றும் நான்கு சில்லுப் பெட்டிகளை நவீனமயப் படுத்தும் பணிக்கும் பாகிஸ்தான் உதவி வழங்கவிருக்கிறது. (அ-1)

# நாணய நிதி செயற்பாட்டில் அரசியல் தலையீடு; இலங்கைக்குக் கடன் கிடைப்பதற்கு தடை இதுவே

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்

வாஷிங்ரன், ஜூன் 28

சர்வதேச நாயண நிதிய செயற்பாடுகள் அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதுவே இலங்கைக்கு கடன் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமாகும். இவ்வாறு கூறியுள்ளார் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

வாஷிங்ரனில் செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது :

இலங்கை அரசாங்கம் கோரிய 1.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதற்கு அரசியல் தலையீடுகளே காரணம்.

சர்வதேச நாணய நிதியம் இதற்கு முன்னர் அரசியல் காரணிகளை முதனிலைப் படுத்திக் கடன் வழங்கவில்லை.

அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் அரசியல் அழுத்தம் காரணமாகவே கடன் தொகை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மனித உரிமை நிலைமைகளின் காரணமாக இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியக் கடன்களை வழங்க முடியாதென மேற் குலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

எவ்வாறெனினும், சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக் கொள்ளக் கூடிய சகல தகுதிகளும் எமக்கு இருக்கின்றது - என்றார். (அ-1)

## அரச சேவையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்பிப்பதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரச காரியாலயங்களில் சிறுபான்மை மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கும் நோக்கில் இந்தத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது - என்றார். (அ-1)

# கல்வியியற் கல்லூரி நியமனம்; பயண ஏற்பாடு செவ்வாயன்று

யாழ்ப்பாணம், ஜூன் 28

கல்வியியற் கல்லூரி டிப்ளோமா தாரிகளுக்கு வவுனியா மாவட்டத்தில் வைத்து வழங்கப்படவிருக்கும் நியமனத்துக்கு செல்லவிருப்பவர்களின் பயண ஏற்பாடுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நாளைமறுதினம் இடம்பெறவுள்ள கப்பல் சேவையில் இவர்கள் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும்- பயண அனுமதி பெற்றவர்கள் இன்றும் பயணத்தை மேற்கொள்ள முடியும் என்றும் - செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (1)

## அந்தரிக்கிறது 'வணங்காமண்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வெளிவிவகார அமைச்சர் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது விடயத்தில் எந்த வித முன்னேற் றத்தையும் காணவில்லை என்று கப்பல் பயணத்தை ஏற்பாடு செய்த ''கருணைச் சேவை''யினர் தெரிவித்துள்ளனர்.

கப்பல் மாலுமிகள் மற்றும் பணியாளர் தொடர்ச்சியாக 51 ஆவது நாள்களாக கப்பலில் தங்கியுள்ளனர். அவர்களின் நிலைமை மோசமாகவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள் ளனர். அதனால் கப்பலை நங்கூரமிட்டு விட்டு கப்பலில் இருப்பவர்கள் உடனடியாக இந்தியா ஊடாக தத்தமது நாடுக ளுக்கு செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கருணைச்சேவையினர் இந்திய அதிகாரிகளிடம் கேட்டுள்ளனர்.

கப்பலில் மாலுமிகளுடன் சேர்ந்து பயணம் செய்யும் கிறிஸ்ற்யான் கற்முண்ஸன் மற்றும் உதயணன் தவராஜசிங்கம் ஆகிய இருவரும் முறையே ஐஸ்லாந்துக்கும் லண்டனுக்கும் விமானம் மூலம் செல்வதற்கு அனுமதிக்குமாறு ஏற்கனவே விண்ணப் பித்துள்ளனர். (அ-1)

## முள்ளியவளைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜி.பி.எஸ் 39, செய்மதித் தொலைபேசிகள் 12, அவற்றுக்கான சிம் கார்டுகள் 13, கொம்பாஸ் 44, தொலைநோக்குக் கண்ணாடிகள் 06, தோட்டாக்கள் 14 என்பனவே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டன என்றும் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர். (அ-சி)

## வேட்புமனு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியும் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தது. வேட்பாளர் ஒருவரின் கையொப்பம் குறித்த சந்தேகத்தை அடுத்து அது நிராகரிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்ய சட்ட ஆலோசகர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் நிசாம் காரியப்பர் கூறியதாக கொழும்பு இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட் டுள்ளது. (அ-1)

## 'பார்சல்' தபாலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலாரம் ஒலித்தது. பாதுகாப்பு அதிகாரிகள் பார்சலை பிரித்துப் பார்த்தனர். அதில் பறவைகள் சுடும் துப் பாக்கி ஒன்று இருந்தது.

அதிர்ச்சியடைந்த அதிகாரிகள் அது குறித்து சுப்பிரமணியத்திடம் விசாரணை நடத்தினர். அப்போது, அது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், பார்சலை 'டெலிவரி' கொடுப்பது மட்டும்தான் தனது பணி என்றும் கூறினார். தொடர் விசாரணையில் அது பறவைகளைச்சுடும் 'எயர் கன்' வகையைச் சேர்ந்தது, ஆபத்தில்லை; அதை வைத்துக்கொள்ள லைசென்ஸ் பெறவேண்டியதில்லை என்று தெரியவந்தது. இருப்பினும் 'கியூ' பிரிவுப் பொலிஸார் இச் சம்பவம் குறித்து தொடர்ந்து விசாரணைகள் நடத்தி வருகின்றனர் - என்றார். (அ-1)

# மரண அறிவித்தல்

## T.V.துரைராசசிங்கம்

தெல்லிப்பழை, வர்த்தலைவிளானைப் பிறப்பிடமாகவும், C.D.I, எபாட் மெண்ற், 104 1/2, மானிங்பிளேஸ், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட T.V.துரைராசசிங்கம் (இளைப்பாறிய அரச சிவில் என்ஜினியர்) 26.06.2009 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான R.T.சீவரத்தினம் (ஓய்வுபெற்ற மூத்த ஆசிரியர், யூனியன் கல்லூரி தெல்லிப்பழை)- சுகிர்தம்மா தம்பதியினரின் மூத்த அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பேரம்பலம் (ஓய்வுபெற்ற அரச F.M.S நிலஅளவையாளர், ஊரெழு) தம்பதியினரின் மருமகனும், ஓய்வுபெற்ற டாக்டர் சொர்ணகாந்தி மலரின் (கண்ணு-றேடிஜியோலிஸ்ற் - லண்டன்) அன்புக் கணவரும், இராகுலன் (ஏரோ என்ஜனியரிங் M.Sc, Phd.London), மேகலா (M.Sc.-Japan) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற செல்வராசசிங்கம் (முன்னாள் ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை) மற்றும் விஜயராசசிங்கம் (ஓய்வுபெற்ற முதன்மை கணித ஆசிரியர், மல்லாகம் மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற அரியராசசிங்கம் மற்றும் சுகிர்தராசசிங்கம் ( எயார் லங்காவின் ஏரோ ஓய்வுபெற்ற என்ஜனியர்), தேவமலர், சத்தியதேவி, திவ்வியராணி(கல்வி டிப்ளோமா பரீட்சைக்கான தேசிய கல்வி நிலையத்தின் ஓய்வுபெற்ற விரிவுரையாளரும், வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும்), தேவரஞ்சினி, கருணேந்திரன் (கனடா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரநாதனின் (ஓய்வுபெற்ற அதிபர், பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த சவச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 30.06.2009 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஜீவபதி, நீதிமன்ற வீதி, மல்லாகம்.*

தகவல்: E.S. விஜயராசசிங்கம் (J.P.) (இளைய சகோதரர்).


விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!

குறைந்த கட்டணத்தினாலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவைகள்

யாழ் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

FedEx Express

வாடிக்கையாளரின் நலன் கருதி

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும், கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

திருமுருகன் கொம்பெனி

259, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P 2227835 (ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (நல்லூர் ப. நோ. கூ. சங்கம். முன்பாக)

TCN Express

2B, Nelson Place, Colombo 06.

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.



Intel 2.2 DuoCore Processor
Asrock G31 Mother Board
120 GB SATA Hard Disk
Kingston DDR II 1 GB Ram
LG DVD Writer SATA
15" LCD Monitor
ATX Black Casing
Keyboard
Optical Mouse
UPS 650 W
44,000/-

Intel 2.2 Duo-Core Processor
Foxconn G31 Mother Board
120 GB SATA Hard Disk
Kingston DDR II 1 GB Ram
Samsung DVD Writer
15" LCD Monitor
ATX Black Casing
Keyboard
Optical Mouse
UPS 650 W
45,000/-

FREE!!! Kingston 4 GB Pen Drive Dust Cover Mouse Pad 5 Games CDs

Intel 2.5 DuoCore Processor
Asus P5 GCMX Mother Board
160 GB SATA Hard Disk
Kingston DDR II 1 GB Ram
Asus Lightscribe DVD Writer
17" LCD Monitor
ATX Black Casing
Keyboard
Optical Mouse
UPS 650 W
51,000/-

Intel 2.5 DuoCore Processor
Intel DG 31 Mother Board
160 GB SATA Hard Disk
Kingston DDR II 1 GB Ram
Sony DVD Writer SATA
17" LCD Monitor
ATX Black Casing
Keyboard
Optical Mouse
UPS 650 W
52,500/-

* Stock Available * Warranty Value 1-3 years

MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.

141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. தொலைபேசி/பக்ஸ்: 021 222 6554

(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)



12.06.2009 ல் நாம் ஐந்தாவது அகவையில் அடியெடுத்து வைத்ததை முன்னிட்டு கட்டணச் சலுகைகளுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

CBCA SRI LANKA

Diploma in Ms Office | Dip. in Programming Languages
Diploma in GIT (G.C.E A/L) | Dip. in DTP & Graphics Design
Diploma in ICT (Grade 10&11) | Diploma in Web Designing
Diploma in Accounting Packages | Children Programme
Diploma in Hardware and Networking | Internet & E-Mail

CB Computer Academy


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.